# அ.நி.சபையிலிருந்து வெளியேருததேன்?

# அஸீசை நோக்கிக் கேள்விக்கணைகள்!

தமிழ்மொழியுரிமைக் கோரிக்கைகள் அரசியல் நிர்ணய சபையில் நிராகரிக்கப்பட்டதையடுத்து தமிழரசுக்கட்சி பா. உ.க்கள் சபையைப் பகிஷ்கரித்து வெளிநடப்பு செய்தபோது, நீங்களும் அவர்களுடன்சேர்ந்து வெளியேறியிருக்கவேண்டும்: ஏன் அப்படிச் செய்யவில்லை? —இவ்வாறு பலரிடமிருந்து கேள்விக் கணைகள் ஐ. தொ. கா. தலைவர் ஜனுப் அசீசை நோக்கிப் பறந்தன. இதற்கு சரியான பதிலளிக்கமுடியாத ஜனுப் அசீஸ், பண்டா—செல்வா ஒப்பந்தம், அது இதென்று கூறி தப்பித்துக் கொண்டார்.

இச் சம்பவம் அட்டனில் அண்மையில் நடைபெற்ற ஐ. தொ. கா. பொதுச் சபைக் கூட்டத்தில் நிகழ்ந்ததாக தெரியவருகிறது.

''அடிப்படை உரிமைகள் பற்றிய அடிப்படைத் தீர்மானங்களில் 'பிரஜைகள்' என்று இருப்பதற்குப் பதிலாக 'ஆட்கள்' என்று இடம்பெற வேண்டுமென்று அ. நி. சபையில் நீங்கள் திருத்தம் கொண்டுவந்தபோது அதைத் தமிழரசுக்

(2ம் பக்கம் பார்க்க)

விலை சதம்: 25. தொலைபேசி: 23411

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, ஆடி 23உ (8-8-71) ஞாயிறு ஐ. அவ்வல் பிறை 16 புத்தகம் 25 இதழ் 37

## கல்வியமைச்சரின் மும்மொழித் திட்டம்!

அரசாங்கம் பின்பற்றவிருக்கும் புதிய கல்விக் கொள்கைபற்றி கொழும்பு ஆனந்தாக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் உரை நிகழ்த்திய கல்வியமைச்சர் பதியுதீன் மஹ்மூத் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார். அமைச்சரது பேச்சு 29-7-71 டெயிலி நியூஸ் இதழில் வெளிவந்துள்ளது.

இந்த புதிய திட்டத்தின் படி,

(1) சிங்களம் அல்லது தமிழ் ஒவ்வொரு மாணவருக்கும் கட்டாய போதனமொழியாக இருக்கும்,

(2) இரண்டாவது கட்டாய மொழியாக ஒவ்வொரு மாணவனும், சிங்களம்

(11ம் பக்கம் பார்க்க)

## 400க்கு ஆக 43!

நாடு முழுவதும் 400 புதிய தாதிகளை சுகாதார அமைச்சு இம்மாதம் நியமனம் செய்துள்ளது. இந்த 400 பேரில் தமிழ் பிரதேசமான வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருப்போர் ஆக 43 பேரே!

# 'தமிழுக்கு வேண்டியது அரசியல் சட்ட அந்தஸ்து!'



## இதில் சிங்களத் தலைவர்களை நம்பும்படி தமிழ்மக்களை நான் கேட்க முடியாது!

'' அரசியலமைப்பிலேயே தமிழ்மொழியின் அந்தஸ்தும் உரிமைகளும் தெளிவாக இடம் பெறவேண்டுமென்பதே தமிழ் மக்களின் கோரிக்கை. கடந்த காலங்களில் நாம் பெற்ற அனுபவங்களை பார்க்கும்போது, இது விஷயத்தில் சிங்களத்தலைவர்களின் வாக்குறுதியை ஏற்றுக்கொள்ளும்படி நான் தமிழ் மக்களைக் கேட்கமுடியாது''

—இவ்வாறு பெரியவர் செல்வா அவர்கள் திரு. சி. எக்ஸ். மாட்டினுக்கு 27-7-71ல் எழுதியுள்ள கடிதமொன்றில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்,

அவரது கடிதவிவரம் வருமாறு:—

'வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களில் தமிழ்மொழி மூலம் நிர்வாகம் நடாத்துவதற்குச் சட்டம் கொண்டு வருவதற்குத் தேசிய சபை உருவாக்கப்படும்போது முதலிடம் அளிக்கப்படும் என்று அரசியல் நிர்ணய சபையில், அரசாங்கம் பிரகடனம் செய்யுமென்று ஏற்றுக் கொள்ளப்பட்டது' என்று உங்கள் கடிதத்தில் கூறியுள்ளீர்கள்.

(2-ம் பக்கம் பார்க்க)

## தமிழினத்துக்காக பேசும் உரிமை தமிழரசுக் கட்சிக்கே உண்டு!

### அடித்துக் கூறுகிறுர் செல்லத்தம்பு!

'இந்நாட்டுத் தமிழ் மக்களின் உணர்ச்சிகளை தமிழரசுக் கட்சி பிரதிபலிக்கவில்லையென்றும், இந்நாட்டுத் தமிழர்களை தமிழரசுக்கட்சி பிரதிநிதித்துவப்படுத்தவில்லையென்றும் இச் சபையிலே ஒரு குற்றம் சுமத்தப்பட்டது.

அப்படிக் குற்றம் சாட்டியவர்களுக்கு கட்டிக் காட்ட விரும்புகிறேன்—அடுத்தடுத்து நடைபெற்ற ஐந்து பொதுத் தேர்தல்களிலும் இந்நாட்டுத் தமிழ் மக்கள், எங்கள் கட்சியிலிருந்து 65 வீதமான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இது சிங்கள மக்கள் கேள்விப்படாத ஒரு அரசியல் சரித்திரமாகும்.

ஓர் உறுப்பினர்:— உங்கள் விதாசாரம் குறைந்துவிட்டது.

செல்லத்தம்பு:— எங்கள் விதாசாரம் குறையவில்லை. ஒரே அளவு வீதாசாரத்தை நாம் தொடர்ந்து காத்து வந்திருக்கிறோம். சிங்கள மக்களின் தேர்தல் வரலாற்றில் கேள்விப்படாத சாதனை இது. 1952ல் யூ. என். பி. வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது; 1956ல் எட்டு இடங்களை மட்டுமே



பெற்று தோல்வியடைந்தது. 1956ல் ஆட்சியைப் பிடித்த மக்கள் ஐக்கிய முன்னணி, 1960 மார்ச்சில் யூ. என். பி.யால் தோற்கடிக்கப்பட்டது. 1960 ஜூலையில் யூ. என். பி. மீண்டும் பாலைவனத்துக்கு அனுப்பப்பட்டு 1965ல் மீண்டும் அதிகாரத்துக்கு வந்தது எங்கள் ஆதரவுடன்! 1970ல் மீண்டும் யூ. என். பி. மண் கவ்வியது. இது சிங்கள இலங்கையின் வரலாறு. ஆனல் தமிழ் இலங்கையிலே தமிழரசுக் கட்சியே ஒரே கட்சியாக தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறது.

ஓர் உறுப்பினர்!—எங்கே டாக்டர் நாகநாதன்!

செல்லத்தம்பு:— தனிப்பட்டவர்கள் வரலாம், போகலாம்—ஆனல் கட்சி

(11ம் பக்கம் பார்க்க)

## திருச்செல்வம் புகார்!

''தேசியநூதனபொருட் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் பொருள்கள் பற்றி சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மாத்திரமே விளக்கம் எழுதப்பட்டுள்ளது. ஆனல் தமிழுக்கு இடமளிக்கப்படவில்லை. இதனல் புராதன கால சின்னங்கள் பற்றிய விபரங்களை அறிய

(2ம் பக்கம் பார்க்க)



## எம். ஜி. ஆர். உதவி நிராகரிப்பு!

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள் அண்மையில் இலங்கை அரசாங்கம் துவங்கிய 'புனர் வாழ்வு' நிதிக்கு நன்கொடையாக தமது 'நாடோடி மன்னன்' படத்தை வழங்க விரும்புவதாக தமிழகத்தில் வைத்துத் தம்மைச் சந்தித்த ஆளும் கட்சியைச்சேர்ந்த சொரணதோட்டை பா. உ. விடம் கூறியதாக செய்தி வெளிவந்திருந்தது அல்லவா?

எம். ஜி. ஆரிடம் இப்படத்தை இலங்கை அரசு நன்கொடையாகப் பெறுவதற்கு ஆளுங்கட்சியைச் சேர்ந்த பல பா. உ. க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்

(2ம் பக்கம் பார்க்க)

## 'கடுகதி' தமிழில் வெளிவருதற்கு காரணகர்த்தா யார்?

### பண்டிதர் இரத்தினமா? குமாரசூரியரா?

கடுகதிச் சுட்டுத் துண்டில் ''கடுகதி'' என்ற தமிழ்ச் சொல்லைப் புகுத்தி வெளியிட்டதற்குத் தபால் தந்தி அமைச்சர் குமாரசூரியருக்குக் காரைநகர் அபிவிருத்திச் சபை பத்திரிகை வாயிலாக நன்றி தெரிவித்துள்ளது. பாவம்! தமிழிலே எதையுஞ் செய்யாத பாராளுமன்ற உறுப்பினரைப் பெற்றுள்ள காரைநகர் மக்கள் ''கடுகதி'' எனும் தமிழ்ச் சொல்லைக் கடுகதித் துண்டில் கண்டு மகிழ்ந்து அதையாகுதல் செய்துவிட்ட அமைச்சரைப் பாராட்டுதலில் குறையில்லை. அவர்களுடைய பா. உ.க்கு இல்லாத தமிழ் ஆர்வம் அவர்களிடம் இருப்பது மகிழ்ச்சிக்குரியது;

ஆனல் ''கடுகதி'' எனும் தமிழ்ச் சொல்லைப் புகுத்தப் போராடியவருக்கு நன்றி கூருமல் தமிழை ஒதுக்கும்—புறக்கணிக்கும்—தமிழுரிமையைப் பறிக்கும்—ஏமாற்றும் அமைச்சருக்கு நன்றி கூறுவது அறியாமையால் விளைந்த அநியாயமாகும்.

(2ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தமிழரசுக் கட்சிக்கு ஒரு இலட்சம் உறுப்பினர்கள்!

தமிழினத்தின் நியாயமான மொழியுரிமைக் கோரிக்கைகள் சிங்கள அரசியல் நிர்ணய சபையினுல் நிராகரிக்கப்பட்டதையடுத்து, தமிழரசுப் பிரதிநிதிகள், அச்சபையிலிருந்து வெளியேறி சபையை பகிஷ்கரித்து வருகின்றனர்.

இப்போது தமிழ் மக்களின் உள்ளங்களில் எல்லாம் எழுகின்ற ஒரேயொரு கேள்வி—தமிழினத்தின் அடுத்த நடவடிக்கையென்ன? என்பதுதான்!

தமிழினம் இனி என்ன செய்யப்போகின்றது—தமிழரசுக்கட்சியின் அடுத்த நடவடிக்கையென்ன—என்பதை அறிவதில் இந்நாட்டு மக்கள் மட்டுமல்ல—உலகமே உன்னிப்பாக கவனித்து வருகிறதென்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

நம்மைப் பொறுத்தவரை—அடுத்த நடவடிக்கை எது என்ற கேள்விக்கே இடமில்லையென்று கருதுகிறேம். தமிழினத்தின் ஒரே நடவடிக்கை தனது இன விடுதலைக்கு போராடுவதாகவே யிருக்கவேண்டும் என்பதே நமது உறுதியான கருத்தாகும். அகிம்சா வழியில், தொடர்ச்சியான போராட்டங்களை நடத்துவதன் மூலமும், கிளர்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலமும், தியாகத் தீயில் குளித்தே தமிழினம் இந்நாட்டில் தனது சுய நிர்ணய உரிமையைப்பெற முடியும் என்ற கருத்தினை நாம் நீண்ட காலமாகவே தெரிவித்து வந்திருக்கிறேம்.

ஆனல் இன்றைய இலங்கையின் அரசியற் சூழ் நிலையில் தமிழின விடுதலைப்போராட்டத்தின் அடுத்த கட்டம் எப்படியமையவேண்டும்—எந்த விதத்தில், எந்த முறையில் தமிழினம் இயங்கவேண்டும் — என்பதை தமிழரசுக்கட்சி தீர்மானிக்கவேண்டுமே தவிர அடுத்த நடவடிக்கை எது என்பதல்ல இன்றுள்ள கேள்வி.

தமிழரசுக்கட்சியின் அரசியல் முதிர்ச்சியும், அனுபவமும் மிக்க தலைவர்கள் இது பற்றி ஆழ்ந்து சிந்தித்து இன்றைய அரசியற் சூழ்நிலையில் அடுத்து தமிழினம் செய்ய வேண்டியது என்ன என்பதை அறிவித்திடவேண்டும்.

அடுத்த கட்டம் பற்றி சிந்தித்திடும் அதே வேளையில் தமிழரசுக்கட்சி கவனித்திடவேண்டிய இருபெரும் பொறுப்புக்களை கட்சித்தலைவர்களுக்கும் பொதுச்சபையினருக்கும் சுட்டிக்காட்டிடுவது நமது கடமையாகும்.

முதலாவது—தமிழரசுக்கட்சியின் பிரசார இயந்திரம் அதிவேகமாக செயல்படவேண்டிய நேரம் இது. இந்நாட்டு நாளேடுகள் அனைத்தும், கட்சிக்கு எதிராக நாளும்பொழுதும் தீவிர பிரசாரம் நடத்திவருகின்றன. இதை முறியடித்திடவும், அரசியல் நிர்ணய சபைக்கு தமிழரசுக்கட்சி சென்றதன் காரணம்; சபையில் கட்சி கொண்டுவந்த திருத்தங்கள்—அவை நிராகரிக்கப்பட்ட வரலாறு; சபையிலிருந்து கட்சி பா. உ.க்கள் வெளியேறி அதைப்பகிஷ்கரிப்பதன் காரணம்; போன்றவற்றை தமிழ் மக்களிடம் தெளிவுற எடுத்துவிளக்கவும் கட்சி தீவிர பிரசாரத்தினை மேற்கொள்ளவேண்டும். இப்பிரசாரத்தினை என்ன முறையில் செய்யலாம் என்பது பற்றி கட்சியினர் சிந்தித்து செயலாற்றவேண்டும்.

இரண்டாவது—கட்சிக்கு ஒரு இலட்சம் உறுப்பினர்களாவது திரட்டப்பட வேண்டும். கட்சிக் கிளைகளைப் புதுப்பித்தும், புனரமைத்தும் புதிய கிளைகளை நிறுவியும் இயக்கத்தை மேலும் வலிவும் பொலிவும் துடிப்பும் உள்ளதாக மாற்றியமைத்திடவேண்டும்.

தமிழரசுக்கட்சி அடுத்த அரசியல் நடவடிக்கையில் இறங்குவதற்கு முன்னர் இவை கவனிக்கப்பட வேண்டும். மீண்டும்கூறுகிறேம். இயக்கப் பிரசாரம்வேகமாக-முடுக்கிவிடப்படவேண்டும்; புதியகட்சிக் கிளைகளைஇல்லாத இடமெங்கும் நிறுவி இயக்கத்தை மேலும் வலுப்படுத்திடவேண்டும். தமிழரசுக்கட்சிக்கு குறைந்தது ஓர் இலட்சம் உறுப்பினர்களாவது சேர்த்திட வேண்டும். இவை சம்பந்தமாக பொதுச்செயலாளரும், பொதுச்சபையினரும் தீவிர அக்கறைசெலுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேம்.

### கருணாநிதியின் உயிர்

தமிழக முதல்வரும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின் உலகெங்கும் வாழும் அறுகோடி திராவிட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிவருபவருமான கலைஞர் கருணாநிதி அவர்களை சிதம்பரத்தில் வைத்து கொலைசெய்ய முயற்சி நடந்ததைக் கேள்வியுற்றபோது ஈழத்தமிழர்கள் இதயமெல்லாம் அழுதன.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த நேரத்தில் இனி எங்கள் கதியென்ன என்று தமிழ்க் குலம் முழுவதுமே கண்ணீர் விட்டழுது கவலையுடன் கேட்ட போது, அண்ணாவின் பிரிவை ஓரளவு ஈடுசெய்து தமிழினத்தின் கண்ணீரைத்துடைத்து விட்டவர் கலைஞர். அண்ணாவின் இழப்பினை ஈடுசெய்யும் வகையில் பணியாற்றி தமிழர்களின் உள்ளங்களை எல்லாம் கொள்ளைகொண்டு விட்டவர் கலைஞர்.

வீழ்ந்துவிட்ட தென்னகம் மீண்டும் எழுச்சிபெற்றிட—தாழ்ந்துவிட்ட தமிழ்நாடு மீண்டும் தலைதூக்கிட—உலகெங்கும் வாழும் தமிழர்கள் நம்பிக்கையுடன் தமிழ்நாட்டை எதிர்நோக்கிடக்கூடியதாக—அயராது பணியாற்றிவருபவர் கலைஞர். கலைஞரது ஆட்சிக்காலத்தில் தமிழர்களுக்கென்றோர் நாடு உருவாகும்; அதன் மூலம் தங்கள் இன்னல்கள் யாவும் தீரும்; என்று வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் அனைவருமே ஆவலுடன் எதிர்நோக்கி காத்திருக்கிறார்கள்.

வாராதுவந்துதித்த மாமணியாக — தமிழ்நாடு சீர்பெற்று சிறந்திடுதற்கு அயராதுழைத்திடும் கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழகத்திற்கு மட்டும் சொந்தமானவரல்லர்; அவர் உலகத்தமிழர்கள் அனைவருக்குமே சொந்தமானவர்.

கலைஞருக்கு ஒரு துன்பம் என்றால், உலகனைத்தும்பரந்து வாழும் ஒவ்வொரு தமிழனும் இன்று துடித்திடுகிறான். ஆம், கலைஞர் கருணாநிதியின் உயிர் ஆறுகோடித்திராவிட மக்களின் உயிருக்கு சமமானது.

எனவே கலைஞரின் உயிரைப்பாதுகாத்திடுவது தமிழ்நாட்டுமக்களின் கடமையென்பதை நாம் இங்கு கூறிடத் தேவையில்லை. கலைஞர் கருணாநிதியின் உயிர் தமிழ் இனத்தின் உயிர். கலைஞரே உலகத்தமிழர்களின் கடைசி நம்பிக்கை நட்சத்திரம்! கலைஞரின் ஆட்சியே கன்னித்தமிழின் ஆட்சி! கலைஞர் வாழ்ந்தாலே தமிழ், தமிழினம் தமிழ்நாடு சீர்பெற்று வாழும். இதை தமிழகத்தார் தமது உள்ளங்களில் பதியவைத்து கொள்வார்களாக.

## ‘தமிழுக்கு...’

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எமது கருத்துக்கள் எவ்வாறுயிருப்பினும், நீதிமன்றங்களின் மொழிக்கொள்கைகளைப் பொறுத்தமட்டில் இந்த யோசனையை ஒரு முதல்படி நடவடிக்கையாக நாம் வேண்டப்பட்டோம்.

சூடு கண்டபூனை அடுப்பங் கரை ஏறாது!

என்னிடம் இரண்டு தஸ்தாவேஜுகள் உள்ளன. ஒன்று—எமது நாட்டின் அன்றைய பிரதமராகவிருந்த திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களினுல் கைச்சாத்திடப்பட்டது. மற்றது எமக்களித்த வாக்குறுதிகள் அடங்கிய தஸ்தாவேஜில் கடந்த அரசாங்கப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவால் கைச்சாத்திடப்பட்டதாகும். ஆனல் இவ்விரண்டுக்கும் கௌரவமளிக்கப் படவில்லை.

1960-ம் ஆண்டிலே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சி அரசைத் தோற்கடிப்பதற்கு வாய்மூலம் பல வாக்குறுதிகளை எமக்களித்து எமது ஆதரவைப் பெற்றது. ஆனல் ஆட்சிக்கு வந்தபொழுது, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எமக்களித்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டது. 1962 முற்பகுதியில் ஜனப்பிரதிநிதிகள் சபையில் நடந்த விவாதமொன்றில் நான் இதனை விளக்கமாகக் கூறியுள்ளேன்.

இவற்றைப் பார்க்குமிடத்து சிங்கள மக்களின் தலைவர்களின் வாக்குறுதியை, புதிய அரசியல் சட்டத்தில் தமிழ்மொழி சம்பந்தமான நிலைபற்றி ஏற்றுக்கொள்ளும்படி தமிழ் மக்களை நான்கேட்க முடியாது. சிங்கள மக்களின் தலைவர்கள் வாக்குறுதிகளை அளிப்பார்கள் ஆனல் அவற்றை நிறைவேற்றும் கட்டம் ஏற்படும்போது, அத்தலைவர்கள் ‘நாம் என்னசெய்வது? மக்கள் அதற்கு எதிர்ப்பாகவுள்ளார்கள்’ என்று கூறுவார்கள்—

## எம். ஜி. ஆர்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

ளார்களாம். தமிழ் வெறியரும் தீவிர தி. மு. க. தலைவருமான எம். ஜி. ஆரிடம் கை நீட்டி நன்கொடை வாங்குவது இலங்கைக்கு இழுக்கு என்று அவர்கள் பலமாக வாதிட்டனராம். எம். ஜி. ஆரிடம் கை நீட்டி உதவி பெற்று விட்டு, எம்.ஜி.ஆர். படத்தை இங்கு எப்படி தடைசெய்ய முடியும் என்றும் அவர்களில் சிலர் தர்க்கித்தனர் என்று அறியப்படுகிறது.

இப்படி தமது சகாக்களிடமிருந்து எழுந்த எதிர்ப்புகளினுல் சொரணதோட்டை பா. உ. செய்வதறியாது திகைத்து விட்டாராம். இறுதியில் ‘நாடோடி மன்னன்’ நன்கொடையை எம். ஜி. ஆரிடமிருந்து வாங்காமல் பிரச்சினையை அப்படியே கைகழுவி விட்டு விடுவது என்று அவர் முடிவு செய்துவிட்டாராம்.

## ‘கடுகதி’ தமீ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடுகதிச் சுட்டுத் துண்டிலும் பதிவுச் சுட்டுத்துண்டிலும் திகதி முத்திரையிலும் தமிழுக்கும் இடம் கொடுக்கப்படவில்லை. இடம் கொடுக்கப்படுமா என்று ஊர்காவற்றுறைப் பா. உ. திரு. கா. பொ. இரத்தினம் கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினராயிருந்த பொழுது பாராளுமன்றத்தில் 4-1-69ஆம் திகதி அப்பொழுதிருந்த தபால் தந்தி அமைச்சரைக் கேட்டார். தமிழுக்கும் இடம் கொடுக்கப்படும் என அவருக்கு உறுதி அளிக்கப்பட்டது.

இந்த உறுதிமொழி விரைவில் நிறைவேற்றப்படாமையால் திரு. இரத்தினம் பா. உ. அவர்கள் இதைச் சுட்டிக் காட்டி மீண்டும் பாராளுமன்றத்தில் 3-11-70இல் வினு எழுப்பினர். அப்பொழுதும் விரைவில் வெளியிடப்படும் என உறுதி மொழி கூறப்பட்டது.

திரு. இரத்தினம் அவர்களுக்குக் கொடுத்த உறுதிமொழியின்படிதான் இப்பொழுது “கடுகதி” தமிழில் வந்துளது. “பதிவு” இன்னும் வரவில்லை. திகதி முத்திரைகளில் எல்லாவற்றிலும் இன்னும் தமிழ் இடம்பெறவல்லை. மீண்டும் திரு. இரத்தினம் இவைபற்றிப் பாராளுமன்றத்துக்குக் கேள்வி அனுப்பியுள்ளார்.

## அ. நி. சபையி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி முழுமையாக ஆதரித்து வாக்களித்திருக்க, நீங்கள் கொண்டுவந்திருந்தது போன்றஅதே திருத்தத்தை மறுநாள் தமிழரசுக்கட்சிகொண்டுவந்தபோது அதை நீங்கள் ஆளுங் கட்சியுடன் சேர்ந்து எதிர்த்து வாக்களித்தீர்களே இது அரசியல் நேர்மையா? மலைநாட்டுத் தமிழ்மக்களின் நலன்களைப் பாதுகாக்கும் பிரச்சினையில் தமிழரசுக் கட்சி உங்களுடன் ஒத்துழைக்கும்போது நீங்கள் அவர்களை எதிர்ப்பதுதான் நியாயமா?”—இவ்வாறெல்லாம் ஜனுப் அஸீசிடம் கேள்விக்கணைகள் விடுக்கப்பட்டனவாம்.

இதற்கு சரியான காரணம் கூற முடியாமற் போன அசீஸ், தாம் தமிழரசுக்கட்சி உறுப்பினர் அல்லர் என்றும் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறுததற்கு இதுவே காரணம் என்றும் கூறிச் சமாளித்தார் என்று தெரிகிறது.

தமிழரசுக்கட்சியின் கொள்கையும், தமது கொள்கையும் வெவ்வேறானவை யென்றும், தமது கட்சி பண்டா—செல்வா ஒப்பந்தத்தையே ஆதரிப்பதாகவும் அதை அமுல் நடத்தும்படி அரசாங்கத்தை வற்புறுத்துமென்றும் அஸீஸ் கூறியிருக்கிறார்.

நாம் அஸீஸிடம் பின்வரும் கேள்விகளை கேட்கிறேம்:

(1) தமிழரசுக்கட்சிக்கும் உங்களுக்கும் இருக்கும் கொள்கைவேறுபாடுகள் ஒருபுறம் இருக்கட்டும். பிரஜாவுரிமையின்றி இருக்கும் 10இலட்சம்மலையகத்தமிழர்களுக்கு அதிமுக்கியமானது என்று நீங்களே குறிப்பிட்ட திருத்தத்தை—‘பிரஜைகள்’ என்பதற்குப் பதிலாக ‘ஆட்கள்’ என்று அடிப்படை உரிமைகள் பற்றிய தீர்மானத்தில் குறிப்பிடப்படவேண்டுமென்று தமிழரசார் கொண்டுவந்த திருத்தத்தை—ஏன் நீங்கள் அ. நி. சபையில் எதிர்த்து வாக்களித்தீர்கள்?

(2) பண்டா—செல்வா ஒப்பந்தமே உங்கள் கொள்கையென்று கூறுகிறீர்கள். பண்டா—செல்வா ஒப்பந்தத்தையாவது ஏற்றுக் கொண்டு அதை அரசியல் சட்டத்தில் சேர்த்துக்கொள்ளும்படி அ. நி. சபையில் தமிழரசார் எவ்வளவு உருக்கமாக அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தனர்? அதுவும் நிராகரிக்கப்பட்ட பின்னர்தானே தமிழரசுக்கட்சி பா. உ.க்கள் சபையிலிருந்து வெளியேறினர்? பண்டா—செல்வா ஒப்பந்தசரத்துகள், அரசியலமைப்புஅடிப்படைத் தீர்மானங்களில் சேர்த்துக் கொள்ளப்படாதபோது, அரசாங்கம் இனி அதை அமுல் நடத்தும் என்று எப்படி ஏமாற்றப் பார்க்கிறீர்கள்?

## திருச்செல்வம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது தமிழ் மக்கள் தவிக்கிறார்கள்.

இது தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்பதற்கு தக்க உதாரணமாகும்.”

“அந்நியர் ஆட்சிக் காலத்தில் மும்மொழிகளுக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. ஆனல் மக்கள் அரசாங்கத்தின் காலத்தில் கொழும்பு நூதனசாலையில் தமிழ் புறக்கணிக்கப் பட்டுள்ளது மிகவும் வேதனை தரத்தக்க சம்பவமாகும்”

—இவ்வாறு மூதவையில் திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. குறிப்பிட்டார்.

“முயற்சி யுடையவன் மண்ணுலகிலும் விண்ணுலகிலும் எதை வேண்டுமானுலும் பெறலாம்.”

—தர்மசக்கரம்.

காலம் பெறுமதியானது. மில்க்வைற் சலவைப்பவுடர் நைலோன், டெர்லின் டெக்ரோன் ஆகிய துணிகளை சில நிமிடங்களில் பிரகாசமாக சலவை செய்கிறது. பாவித்த மேலுறைகளை சேகரித்து அனுப்பி மிக உயரிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**
**த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிரண்டும் விற்று சித்திரம் வாங்குவோமா?

அன்பு நண்பா,

வட்டுக்கோட்டைக்குப் போகும் வழியைக் கேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப் பாக்கு என்று பதில் வந்தது போல, தமிழரசுத் தந்தை செல்வா அவர்கள் ஒரே ஒரு கருத்தை திரும்பத் திரும்பத் தெளிவுடன் எடுத்துக்கூறியும், அதனைப்புரிந்து கொண்டிடாமல் எதனையோவெல்லாம் கூறி யாழ். பா. உ. திரு. மாட்டின் 'சமாளித்து' வருவதனை கவனித்திருப்பாய். மாட்டின், பெரியவர் செல்வாவுக்கு எழுதியுள்ள இறுதிக்கடிதத்திலும் இதே நிலையே காணப்படுகிறது!

தமிழ் மொழியின் அந்தஸ்தை தீர்மானிக்கும் உரிமையை எதிர்காலத் தேசிய சபைகளின் பொறுப்பில் விடக்கூடாது. இப்பிரச்சினையில் சிங்களத்தலைவர்களின் வாக்குறுதிகளை நம்பி கடந்த காலங்களில் நடைபெற்றதுபோல தமிழினம் ஏமாந்து போகவும் முடியாது. தமிழ்மொழியின் உரிமைகளும் அந்தஸ்தும், அரசியல் சட்டத்திலேயே தெளிவாக இடம்பெறவேண்டும். இதுவே தமிழினத்தினதும் தமிழரசுக்கட்சியினதும் ஒருமுகமான கோரிக்கை. இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டதனாலேயே அரசியல் நிர்ணயசபையிலிருந்து நாம் வெளியேறினோம்.

இந்த உண்மையைப்புரிந்து கொண்டிடாமலோ—அல்லது தனது தவறான போக்கினை மூடிமறைத்திடவோ — 'முக்கூட்டு' ஒப்பந்தம் என்றும் அது இதென்றும் தமது கடிதத்தில் கதையளந்திருக்கிறார் மாட்டின்!

அரசாங்கத்திலிருப்பவர்களும், எதிர்க்கட்சியிலிருப்பவர்களும் சிங்களத்தலைவர்களே. இந்த இருபகுதியினருமே தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் கடந்த பதினைந்தாண்டுகளில் எத்தனையோ ஒப்பந்தங்களை யெழுதி—அப்போதைய நெருக்கடி தீர்ந்தவுடன் — அவற்றைக் காற்றில் பறக்கவிட்டதை வரலாறு அறியும்.

அதுவும் இன்று ஒரு புதிய அரசியலமைப்பு இந்நாட்டுக்குத் தயாராகிக்கொண்டிருக்கிறது. ஒரு நாட்டில் வாழும் பல்வேறு இனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளும் மொழிகளுக்கு தரப்பட்டுள்ள அந்தஸ்தும் எத்தகையது என்பதை அந்தந்த நாட்டின் அரசியல் சாசனங்களே நமக்கு தெளிவாக எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றன. புதிய அரசியல் சட்டத்தில் தமிழினத்துக்கும் தமிழ்மொழிக்கும் எத்தகைய அந்தஸ்து தரப்பட்டிருக்கிறது என்பதை பொறுத்தே எமது மக்களின் கௌரவம் கணிக்கப்படவிருக்கிறது!

ஆனால் இங்கு நடைபெற்றதென்ன? புதிய அரசியல் சட்டத்தில் சிங்களமே நாட்டின் ஆட்சிமொழியென்பது இடம்பெறப் போகிறது; சிங்களமே நாட்டின் நீதிமன்ற அலுவல் மொழியென்பது இடம்பெறப்போகிறது; ஆனால் தமிழைப்பற்றி—தமிழின் அந்தஸ்து பற்றி — அரசியல் அமைப்பு அடிப்படைத் தீர்மானங்களில் பேச்சு மூச்சில்லை; வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை—நீதிமன்ற மொழிப் பிரச்சினையில் எதிர்காலத்தில் அமையவிருக்கும் தேசிய சபை விரும்பினால் வேறு ஏற்பாடு செய்யலாம் என்று தெளிவற்ற ஒரு நிலையே புகுத்தப்பட்டிருக்கிறது.

**இதன் பொருள் என்னதெரியுமா நண்பா? தமிழ் மொழியும் தமிழினமும், காலாகாலமும் பெரும்பான்மை சிங்கள மக்களின் தயவிலும், நல்லெண்ணத்திலுமே தங்கியிருக்கவேண்டும் என்பதுதான்! இதுதான் சிங்களத் தலைவர்களின் உள்ளக் கிடக்கையாகும்!**

இத்தகைய ஒரு இழி நிலையை — அடிமை நிலையை—தமிழ் இனத்தின் பிரதிநிதிகளே ஏற்றுக் கொள்ளுவதா? இத்தகைய நிலையை ஏற்க மறுத்து — தமிழினத்தின் தன்மானத்தையும் விடுதலை உரிமை வேட்கையையும் பிரதிபலித்திடும் வகையில்—தமிழரசுப் பிரதிநிதிகள் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறி அதனைப் பகிஷ்கரித்து வருகிறார்கள்.

தமிழினத்தின் அடிமை நிலையை அப்படியே ஏற்றுக்கொண்டு தமிழ்த்தாயின் கௌரவத்துக்கு இழுக்குத்தேடி வருகிறார்கள் அரசியலமைப்பு சபையில் தொடர்ந்து அங்கம் வகித்து வரும் திருவாளர்கள் மாட்டின், அருளம்பலம், ஆனந்தசங்கரி, தியாகராசா, தேவநாயகம், தம்பிராசா, ராஜன் செல்வநாயகம், எம். சி. சுப்பிரமணியம் ஆகியோர்!

நண்பா, ஒன்றை நாம் நினைவிற் கொண்டிடவேண்டும். நம்மை எதிர்க்கிறார்களே சில தமிழர்கள்; சுயநலத்திற்காகவும், பட்டம் பதவிகளை எதிர்பார்த்தும், ஆளுங்கட்சிக்கு சாமரை வீசி வருகிறார்களே சில எட்டப்பர்கள்; அவர்களுக்குமாக—அவர்களது வருங்காலச் சந்ததிகளுக்குமாகவே—நாம் உரிமைக் குரல் கொடுக்கிறோம்; விடுதலைக்குப் போராடுகிறோம்!

ஆளுங்கட்சியினரின் காலைக்கழுவி—குற்றேவல் செய்து—தமது இன்றைய சில சுயநலத் தேவைகளைப் பூர்த்தி செய்திடுவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் அவர்கள்; ஆனால் நாமோ வருங்காலச் சந்ததிகளைப்பற்றி—இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னும் இந்நாட்டில் தமிழினம் தமிழினமாக வாழ்வதற்கு நாம் இன்று செய்திடவேண்டிய கடமைகள் பற்றி சிந்தித்திடுகிறோம்!

மொழி, பிரதேசம், கலை, கலாசாரம், தனித்துவம்—இவையெல்லாம் அழிந்துபோனாலும் பரவாயில்லை; தமிழினத்திற்கு இன்று வேண்டியது பாலங்களும், பள்ளிக்கூடங்களும், தபால் அலுவலகங்களும், மருத்துவமனைகளும், தார்ரோட்டுக்களுமே; அவற்றைப்பெற ஆட்சியினரின் காலைப்பிடிப்போம்; இவற்றுக்கு விலையாக தமிழைக்கொடுப்போம்—என்கின்றனர் அவர்கள்; கண்களை விற்றுச் சித்திரம் வாங்கிடலாம் வாரீர் என அழைத்திடுகின்றனர் அன்னார் தமிழ் மக்களை!

ஆனால் நாமோ, பாலங்களையும், பள்ளிக்கூடங்களையும் விட பைந்தமிழே நமக்குப் பெரிது; தார்ரோட்டுக்களையும் தபால் நிலையங்களையும் விட தமிழ் பிரதேசங்களின் பாதுகாப்பே எமக்கு இன்றியமையாதது; சோற்றைவிட சுதந்திரமே ஆயிரகோடி மடங்கு நமக்கு உயர்ந்தது; கண்களை விற்று சித்திரம் வாங்கிடும் கபோதிகளல்லர் தமிழ் குலத்தார்—என்று கூறுகின்றோம்!

நண்பா, ஈழத்தமிழ் நாட்டில் தமிழினத்துக்கென்று தமிழ் அரசொன்று அமைந்து விட்டால் நமக்கு வேண்டிய பாலங்களையும் பாடசாலைகளையும், பள்ளிக்கூடங்களையும் மருத்துவமனைகளையும் நாமே கட்டிக்கொள்ளலாம்; யாரிடத்தும் கெஞ்சிடவும், யாருக்கும் அஞ்சிடவும் வேண்டிய அவசியம் நமக்கு கிடையாது; எனவேதான் தமிழினம் தனது இனவிடுதலைக்காக, இரத்தம், கண்ணீர், வியர்வை சிந்தி, தியாகப்போராட்டத்தில் குதித்து, தமிழ் பிரதேசத்தில் தன்னாட்சி அமைத்திடவேண்டுமென்கின்றோம் நாம்! சுயநிர்ணய உரிமை கோரி குரல் கொடுத்திடுகிறது நமது இயக்கம்!

நண்பா, வியட்நாம் போரில் எத்தனை பெரிய பாலங்களையும் கட்டடங்களையும், மருத்துவமனைகளையும் பள்ளிக்கூடங்களையும் வியட்நாம்மக்கள் இதுவரை இழந்திருப்பார்கள்? இலட்சக்கணக்கான உயிர்களையே பலிகொடுத்து வரும் அந்த வீர மக்களுக்கு பாலங்களும், பள்ளிக் கூடங்களும் ஒரு பொருட்டாகுமா? ஏன் இத்தனை தூரம் தியாகவேள்வியில் குதித்து வருகிறார்கள்?

அடிமைத்தனத்தை ஏற்க மறுத்து—சுதந்திரத்துக்காக போராடிவருவதனால்தான்! தங்கள் நாட்டில் விடுதலையை அவர்கள் பெரிதும் நேசிப்பதனால்தான்!

கிழக்கு பாகிஸ்தான் மக்கள்—வங்காள நாடு அமைத்திடும் தங்கள் போராட்டத்தின் பயனாக எத்தனை இலட்சம் உயிரைப் பலிகொடுத்திட்டனர் இதுவரை; கிழக்கு பாகிஸ்தானிலுள்ள எத்தனை பல்கலைக் கழகங்கள், பாலங்கள், மருத்துவ மனைகள் இதுவரை தரை மட்டமாகியிருக்கும்? எத்தனை இலட்சம் அகதிகள் நாட்டைவிட்டு வெளியேறி தொல்லைகள் ஏற்றிடுகின்றனர்? இருந்தும் கொஞ்சம் கூட சளைத்திடாது—உறுதிகுன்றாது அம்மக்கள் போராடுகின்றனர் என்றால் அதற்குக் காரணம் அவர்களது உள்ளத்திலே பற்றிப்படர்ந்திருக்கும் விடுதலை வேட்கையே!

**ஈழத் தமிழினம் அவ்வளவு தூரம் போராடாவிட்டாலும் — போராடும் சூழ்நிலை இன்னும் ஏற்படா விட்டாலும்— பாலங்களுக்காகவும், மதவுகளுக்காகவும் இன்னும் இது போன்ற அற்ப சில்லறை சலுகைகளுக்காவும்—தன்மானத்தை இழந்து தேனினுமினிய தமிழ் மொழியை அடகு வைத்திடலாமா?**

கூடாது; கூடவே கூடாது; எதிரியிடம் பிச்சை எடுப்பதைவிட பட்டினிகிடந்து இறப்பதுமேல் என்பதே தமிழனின் தத்துவம்; என்று நீ கூறிடுவாய் நண்பா, உன் உள்ளக் குமுறலை நான் அறிந்திடாதவனா என்ன?

**ஆனால் உள்ளபடியே எனக்கிருக்கும் வருத்தமெல்லாம் — தமிழராகப் பிறந்தோர் சிலர்—அதுவும் தமிழ்ப் பிரதிநிதிகளாக தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்ட சிலர் — தன்மான உணர்வு கிஞ்சிற்றுமின்றி—எலும்புத் துண்டுக்காக ஆளுங்கட்சியிடம் மண்டியிட்டு தமிழினத்திற்கு தீராதவடுவை—அழியாத கறையை ஏற்படுத்தி வருகின்றனரே என்பது தான்!**

நண்பா, தமிழரசுக்கட்சி அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறியதன் பின், இந்நாட்டு நாளேடுகள் அடுத்தடுத்து ஒரு வகைப் பிரசாரத்தினை மேற்கொண்டதை நீ கவனித்தாயோ என்னவோ நான் கவனித்தேன்; வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அரசாங்கம் தொழிற்சாலைகளை "லொறிக் கணக்காக" கொண்டுசென்று குவிக்கப்போவதாகத் தீவிர பிரசாரம் செய்துவருகின்றன இந்த ஏடுகள்;

யாழ்ப்பாணம், வவுனியா, திருமலை, மட்டக்களப்பு ஆகிய நான்கு மாவட்டங்களிலும் மொத்தம் 65 புதிய கைத்தொழிற்சாலைகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கு திட்டவேலை வாய்ப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. மொத்தம் ஒரு கோடிக்கும் அதிகமான ரூபாவை இத்தொழிற்சாலைகள் அமைப்பதற்காக மேற்படி அமைச்சு வழங்கும் —

தினகரன் (13-7-71)

மன்னாரில் 36 தொழிற்சாலைகளை ஆரம்பிக்கச் சிபார்சு—திட்டவேலைவாய்ப்பு பகுதி அவற்றை ஆராய்கின்றது—

தினகரன் (20-7-71)

திருகோணமலை மாவட்டத்தில் 34 தொழிற்சாலைகளை நிறுவ நிதியமைச்சு முடிவு—

வீரகேசரி (21-7-71)

## அரசியல் மடல்

நண்பா, நாளேடுகளில் வந்த செய்திகளில் சிலவே மேலே தரப்பட்டுள்ளவை. நியாயமான நமது மொழியுரிமைக் கோரிக்கை மறுக்கப்பட்டதையடுத்து அ. நி. சபையிலிருந்து நாம் வெளியேறியதன் காரணமாக தமிழ் மக்களிடம் பொங்கியெழுந்திட்ட உரிமை உணர்வை திசை திருப்பிடும் நோக்குடன் நாளேடுகள் கையாண்ட நாடகமா அல்லது உள்ளபடியே தமிழ் பிரதேசங்களின் வளர்ச்சியில் அரசுக்கு 'திடீர்' அக்கறை ஏற்பட்டுள்ளதா என்பது தெரியவில்லை. தமிழ் மக்களின் நீண்ட நாள் கனவான காங்கேசன் துறைமுக அபிவிருத்தி வேலைகள் அப்படியே நிறுத்திவைக்கப்பட்டுள்ளதையும் தமிழ் மக்கள் இன்னும் மறந்து விடவில்லை.

ஆனால் ஒன்று நண்பா—நாளேடுகளில் வந்த செய்திகள் அப்படியே உண்மையாக இருந்து—அரசாங்கம் நமக்கு உள்ளபடியே தொழிற்சாலைகள் சிலவற்றை அமைத்துத் தந்து நமது தமிழ் பிரதேசங்களை அபிவிருத்தி செய்திட முன்வருமாக இருந்தால் அதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

**தமிழ் மக்களின் வரிப்பணம் முழுவதும் அரசாங்கத்துக்கே போகிறது; தமிழ் மக்களும் இந்நாட்டு மக்களே. எனவே தமிழ் மக்கள் வாழும் பகுதிகளை அபிவிருத்தி செய்து தரவேண்டியது அரசாங்கத்தின் கடமை; அதுவும் சோசலிச அரசாங்கமென்று தன்னை அழைத்துக்கொள்ளும் ஒரு அரசின் நீங்காக் கடமையென்பதை யார்தான் மறுத்திடுவர்?**

ஆனால், தமிழ் பிரதேசத்துக்கு சில தொழிற்சாலைகளை வழங்கிடுவதன் மூலமோ—அல்லது வழங்கிடுவதுபோல நடிப்பதன் மூலமோ—தமிழ் மக்களை மயக்கி—தமிழினத்தின் விடுதலை உணர்வையோ, மொழியுரிமைக் கோரிக்கைகளையோ, தமிழ் நிலத்தை தமிழ் நிலமாகப் பாதுகாத்திட வேண்டும்; தமிழினத்தின் தனித்துவத்தை பேணிடவேண்டும்; என்கின்ற இலட்சியங்களையோ மழுங்கடித்திடச் செய்திடலாம் என்று யாராவது கருதுவார்களானால், வீணே மனப்பால் குடித்திட வேண்டாமென்று மட்டும் அவர்களுக்கு கூறிக்கொள்வோம்!

**உன் அன்புத் தோழன்**

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அ. நி. சபையில் பண்டிதர் இரத்தினம் (1)

# மொழிப் பிரச்சினைக்கு வித்திட்டது சிங்களம் மட்டும் சட்டமே!



அரசியல் நிர்ணய சபையில் தமிழ் மொழியுரிமைகள் சம்பந்தமான தமிழரசுக் கட்சிப் பிரேரணை மீது தமிழரசு பா.உ.க்கள் ஆற்றிய உரைகளை வாசகர்களுக்குத் தருவதாக முன்பு உறுதியளித்திருந்தோம். திரு. எக்ஸ். எம். செல்லம்புவின் உரை ஏற்கெனவே சுதந்திரனில் இடம்பெற்றுவிட்டது. இவ்விதழில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களதுஉரையின்முதல் பகுதி இடம்பெறுகிறது. தொடர்ந்து ஏனையோரது பேச்சுக்கள் சுதந்திரனில் இடம் பெறும். —ஆர்.

மாண்புமிகு அணைத்தலைவர் அவர்களே, அடிப்படைத் தீர்மானங்கள் 11,12,23,24 ஆகியவற்றிற்கு திருவாளர் சா. ஜே. வே. செல்வநாயகம் கியு. ஸி. அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள பின்வரும் திருத்தப் பிரேரணையை நான் முன்மொழிகிறேன்:

சிங்களமும், தமிழும்—

(அ) சட்டங்கள் ஆக்கப்பட வேண்டிய மொழிகளாதல் வேண்டும்;

(ஆ) இலங்கையின் அரசகரும மொழிகளாதல்வேண்டும்;

(இ) நீதிமன்றங்களின் மொழிகளாதல் வேண்டும்; அத்துடன்,

(ஈ) எல்லாச் சட்டங்களும் பிரேரிக்கப்படவேண்டிய மொழிகளாதல் வேண்டும்;

ஸ்ரீலங்கா என்ற சிங்களச் சொல்லை இலங்கை என்று வழங்கவேண்டுமென்று நான் முன்னர் வேண்டுகோள் விடுத்திருந்தேன். தமிழ் மொழியின் உயிர்நிலை அதன் இலக்கணமாகும். நல்லமுறையில் இலக்கணம் அமைந்த மொழி தமிழ் மொழி. தமிழ்மொழி என்றுதோன்றியதோ அன்று தொடக்கம் அதற்கு இலக்கணமும் உண்டு. தமிழ்மொழியின் இலக்கண நூல்களில் தொல்காப்பியம் மிகப் பழமை

இருக்கவேண்டுமென்று கேட்கிறேன்:

நான் இங்கே மிக நீண்ட பேச்சொன்றை நிகழ்த்த வேண்டிய கடமைப்பாடுடையவனாக இருக்கிறேன். நாம் இங்கு கொண்டுவந்துள்ள திருத்தங்கள் தமிழ் மக்களுடைய உயிர்ப் பிரச்சினையைப் பற்றியன. உண்மைத் தமிழர் ஒவ்வொருவரையும் வாட்டி வதைக்கின்ற பிரச்சினையாகும்; இது 1956ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இருந்துவருகின்ற பிரச்சினையாகும். அது மட்டுமல்லாமல் பல அரசாங்கங்களினாலும் பல பேச்சுக்களினாலும் இன்னும் தீர்க்கப்படாமல் தமிழ் மக்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கின்ற பிரச்சினையாக இது இருக்கின்றது. பலமுறை இந்த இலங்கையை ஆண்ட அரசாங்கங்கள் முயற்சிசெய்தும் அந்த முயற்சியின் பலனாக இன்னும் விடுவிக்கப்படாமலிருக்கின்ற ஒரு பிரச்சினையாக இது இருக்கின்றது.

எனவே, அரசியலமைப்புச் சட்டம் எழுதப்படுகின்ற இந்நேரத்தில் இந்த மொழிப் பிரச்சினையைப் பற்றி — இந்நாட்டுத் தமிழ் மக்கள் என்ன எண்ணுகின்றார்கள்? அவர்களுக்கு என்ன இடர்ப்பாடுகள் எழுந்திருக்கின்றன என்பதைப்பற்றி — எடுத்துரைக்கவேண்டும்; அமைச்சர்கள் பதவி கிடைக்கலாம்; சலுகைகள் கிடைக்கலாம் என்ற நோக்கங்களுடன் அரசாங்கத்தைச் சேர்ந்துள்ள சில தமிழர்களைத் தவிர ஏனைய தமிழர்கள் எல்லோரும் என்ன நினைக்கின்றார்கள் என்பதை இந்நேரத்தில் எடுத்துக்கூறவேண்டியது எனது கடமை.

### மொழி இனத்தின் உயிர் போன்றது

மொழிஓர் இனத்தின் உயிர்ப் பிரச்சினை யென்று நான் கூறுகின்றேன். ஒரு இனத்துக்கு உயிராக—அவ்வினத்தின் ஆக்கத்துக்கு, விருத்திக்கு ஒரு சிறந்த கருவியாக அமைவதுதான் அவ்வினத்தின் மொழியாகும். மொழி ஓர் இனத்தின் உயிர் போன்றது. மதத்திலும் பார்க்க

கொந்தளிப்பான நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இரண்டு இன மக்கள் வாழுகின்ற ஒரு நாட்டிலே ஓர் இனத்தை அடக்கி வைத்துக்கொண்டிருப்பது, அதுவும் மொழியின் பெயரில் பிரித்து அடக்கி வைத்துக்கொண்டிருப்பது ஒருபோதும் நாட்டிலே ஒற்றுமையை உண்டாக்காது என்பதில் எந்த விதமான ஐயத்துக்கும் இடமில்லை.

மக்களுக்கு ஒரு மதிப்பை, சுய மரியாதையை கொடுப்பது மொழிதான். தமிழ் மக்களுடைய மொழியைச் சிங்கள மக்கள் மதித்தால், தமிழ் மக்களும் அவர்களுடைய மொழியை மதிக்கத் தயாராக இருக்கிறார்கள். அப்படிச் செய்வார்களேயானால், சிங்கள மக்களுடைய மொழியை நாங்கள் போற்றத்தான் வேண்டும். அதுபோல சிங்கள மக்களும் தமிழ் மக்களுடைய மொழியைப் போற்றவேண்டும்.

அருளம்பலம் கூறுகிறார். பிரதமரை நம்புங்கள், அரசியல் விவகார அமைச்சரை நம்புங்கள் என்றும் அவர் சொல்கிறார். நாங்கள் பிரதமரையோ அரசியல் அமைப்பு அமைச்சரையோ நம்புவதாக இருந்தால் இந்த நாட்டிற்கு ஒரு புதிய அரசியல் அமைப்புச் சட்டம் தேவை இல்லை.

ஆட்சி மாறி மாறி வரும் தன்மையுடையது: ஆட்சியாளர்களும் மாறி மாறி வருவார்கள். இன்று இந்த நாட்டின் தலைவராக இருப்பவர் அடுத்த தேர்தலில் வருவாரோ, அல்லது வரமாட்டாரோ என்று எவரும் சொல்லமுடியாது, எனவே, நாங்கள் தனிப்பட்ட ஆட்களில் நம்பிக்கை வைத்து எங்கள் உரிமைகளைப் பறிபோகவிட்டு அடிமைகளாக வாழ முடியாது. எனவே, நாம் இங்கே நிறைவேற்றுகின்ற அடிப்படைத் தீர்மானங்கள் சகலருக்கும்பாதுபாற் போக முடியாது: அரசியலமைப்பு நிலையற் கட்டளையில் 12 ஆவது பகுதி மட்டுமல்ல, 13, 47, 48 ஆகியவற்றிலும் அடிப்படைத் தீர்மானங்களின் மேல்தான்—அடிப்படைத் தீர்மானங்களுக்கு அப்பால் போகாமல்—சட்டங்கள் அமைக்கப்பட வேண்டும் எனக் கூறப்படுவதனாலேயே நான் இதனைச் சொல்ல விரும்பினேன்.

எனவே, இந்த அடிப்படைத்தீர்மானங்களிலே சேர்க்கப்படாத உரிமைகளோடு தொடர்புடைய எந்த விடயத்தையும் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்திலே எழுத முடியாதென்பதை இந்த நான்கு நிலையற்

## பதினைந்தாண்டுகள் கழிந்தும் தமிழ்மொழி உரிமைகள் தரப்படவில்லை!"

அப்பொழுதுதான் இந்த இரு இன மக்களும் ஒருவரையொருவர் மதிப்பவர்களாவார்கள்.

### அடிமைகளாக வாழமுடியாது

1956 ஆம் ஆண்டிலே இந்த நாட்டிலே சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்ட பொழுதுதான் மொழிப் பிரச்சினை தோன்றியது என்பதை எவராலும் மறுக்கமுடியாது. இந்த மொழிப் பிரச்சினையால் உண்மையில் தமிழர்கள் எல்லாரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, தமிழ் மக்களுடைய பிரச்சினையாக இருக்கும் இதை நன்கு அலசி ஆராய்ந்து நல்ல முறையில் தீர்க்கவேண்டியது உங்களது கடமையாகும்.

இந்த மொழிப் பிரச்சினையை, நன்கு கலந்து பேசி, அலசி ஆராய்ந்து நாட்டின்

காப்பளிப்பவையாக இருக்க வேண்டும்.

### உரிமைகள் பறிக்கப்படும் வரலாறு

சிங்களம் மட்டும் சட்டத்தினால் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள். உண்மைதான். அதை ஆக்கிய கௌரவ பிரதமர் காலஞ்சென்ற திருவாளர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க அவர்கள் கூட, தேவைப்பட்டால் சிங்களச் சட்டத்தை மாற்றுவேன், மாற்ற முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனினும் தமிழ் மக்களுக்கு எந்த உரிமையைக்கொடுத்தாலும் யாராவது தீவிரவாதிகள் இது சட்டத்துக்கு மாறானது என்று சொல்லி விட்டால் அந்த உரிமைகள் எல்லாம் பறிக்கப்படும் வரலாறுதான் கடந்த பதினைந்து ஆண்டு காலமாக நாம் கண்டது.

கட்டளைகளும் விளக்குகின்றன.

### தீர்க்க முடியாததன் காரணம்!

1956ம் ஆண்டு தொடக்கம் இன்று வரையும் தமிழ் மொழிப் பிரச்சினை தீர்க்கப்படவில்லையென்றால் அதற்குக் காரணம், 1956ம் வருடத்திய 33ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தில் ''சிங்களம் மட்டும்'' என்ற சொல்லை வைத்திருந்தபடியால், தமிழ் மொழிக்கு உரிமை கொடுக்க விரும்பிய அரசாங்கங்கள்கூட தீவிரவாதிகளுக்குப் பயந்து அதனை வழங்க முன்வராமையேயாகும்.

காலஞ்சென்ற திருவாளர் பண்டாரநாயகா மொழிச் சட்டத்திற் பேசும் பொழுது தேவைப்பட்டால் அரசகரும மொழிச் சட்டத்தைத் திருத்துவதாகக்கூடக் கூறினார். அந்தச் சட்டம் எவ்விதம் செயற்படப் போகின்றது என்பது தெரியாதென்றும் அவர் கூறியிருக்கிறார். அதுமட்டுமல்ல, இந்த விஷயத்தில் அவர் பிழை விட்டதாகவும் சொன்னார். எனவே, அவர் விட்ட பிழையை மீண்டும் விடவேண்டாம் என்று நான் உங்களைக் கேட்கின்றேன்.

1956ம் ஆண்டிலே சிங்கள மொழிச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பொழுது தமிழுக்கு உரிமை வழங்கும் சட்டத்தையும் கொண்டு வந்திருக்க வேண்டுமென்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். எனவே, இந்த அடிப்படைத் தீர்மானங்களை அமைக்கும் பொழுதே தமிழ் மக்களுக்குத் தேவையான தீர்மானங்களையும் அமைக்காமல் அரசியல் அமைப்புச் சட்டம் வரும்போது அவற்றையிட்டுக் கவனஞ் செலுத்துவோம், அல்லது அடுத்த தேசிய மன்றத்தில் அவற்றை ஆக்கித் தருவோம் என்று கூறினால், அல்லது அவ்விதம் செய்வார்கள் என்று யாராவது எண்ணினால் ஒன்றில் அவர்கள் கடந்த பதினைந்து வருடங்களாக இங்கு வாழதவர்களாக இருந்திருக்க வேண்

(11-ம் பக்கம் பார்க்க)

## "தனி மனிதர்களில் தமிழினம் நம்பிக்கை வைக்கமுடியாது; தமிழுரிமைகள் அரசியல் சட்டத்தில் இடம்பெறவேண்டும்"

வாய்ந்ததாகும்; இரண்டாயிரம், மூவாயிரம் வருடங்களாக நல்லமுறையில் இலக்கணத்துடன் இயங்கிவரும் அந்த மொழியை இன்று பலரும் தாம் நினைத்த போக்கில் கையாள்வது கண்டு நாம் துன்பப்படுகிறோம்.

### தீர்க்கப்படாத பிரச்சினை

தமிழைத் தமிழாகக் கையாள்வது தான் சிறந்தது. தமிழ் மொழியைத் தூய்மையாகக் கையாளுகின்ற அந்த உரிமைகூட இன்று இல்லாதிருப்பதைக் கண்டு தமிழ் மக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள்: தமிழ் மொழியைத் தூய்மையாக செம்மையாக எழுதுகின்ற அந்த உரிமையைப் பறிக்க வேண்டாம் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்ரீலங்கா என்று தமிழில் எழுதுவதால் அது தமிழாகிவிடாது. ஆகவே மொழிபெயர்ப்புக்கள் எல்லாம் தூய்மையானதாக

மொழி ஓர் இனத்தை ஒன்றாக இணைப்பதிலே வலிமையுடையது.

இன்று பௌத்தர்களாக இருப்பவர்கள் நாளை வேறொரு மதத்துக்கு மாறலாம். இன்று இந்துக்களாக இருப்பவர்கள் நாளை பௌத்தர்களாகலாம். ஆனால், இன்று தமிழ் பேசுகிறவர்கள் நாளை சிங்களம் பேசுகிறவர்களாக ஆகிவிடமுடியாது. அல்லது வேறு ஓர் இன மக்களாக மாறிவிட முடியாது. எனவே மதங்களிலும் பார்க்க மொழிதான் இந்த உலகத்திலே இனத்தை இணைப்பதில் வலிமையுடையதாக இருக்கிறது என்று கூறுவது மிகையாகாது.

கிழக்குப் பாகிஸ்தானும் மேற்குப் பாகிஸ்தானும் மதத்தால் ஒன்றுபட்டனவாக இருந்த போதிலும் மொழியால் வேறுபட்டனவாக அவை இருப்பதினாலேதான் இன்று அங்கே ஒரு

நலனை மனதில் வைத்து நல்ல முறையிலே தீர்க்கவேண்டுமே தவிர, உங்களிடமுள்ள பெரும்பான்மை வாக்குப் பலத்தை வைத்துத் தீர்க்கக் கூடாது. இதுவரை பல முறைகளில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுயன்றீர்கள். ஆனால் முடியவில்லை. இப்பொழுதும் 1956 ஆம் ஆண்டு நிலையிலே நாம் இருக்கிறோம்.

இந்த அரசியல் அமைப்புச் சபையிலே தமிழ் என்ன உரிமையைப் பெறப் போகிறது; ஏறத்தாழ 15 ஆண்டு காலமாகப்போராடி வந்த தமிழர்கள் என்ன உரிமையைப் பெறப்போகிறார்கள் என்பதை இன்று இலங்கை வாழ் தமிழ் மக்கள் ஆழ்ந்து நோக்கிய வண்ணம் இருக்கிறார்கள்.

அரசியல் அமைப்புச் சட்டம் வரும்போது கிடைக்காத உரிமைகள் எல்லாம் கிடைக்கும் நம்புங்கள் என்று திரு

அரசியலமைப்பு அடிப்படைத் தீர்மானங்களிலே இல்லாத எதையும், உண்மையிலே அரசாங்கம் விரும்பினாலும் கூடகொண்டு வர முடியாது—கொடுக்க முடியாது—என்பதை எவரும் மறுக்க முடியாது.

அடிப்படைத் தீர்மானங்களிலே உரிமை கொடுக்கப்படவில்லை. அவ்விதமிருக்கும் பொழுது சட்டத்தில் வரும் என்று கூறுவது, நம்பி ஏமாறுகிற கதையாகத்தான் முடியும் என்பதை சட்டத்திலே வரும் என்று நம்புகிறவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அரசியலமைப்புச் சட்டத்துக்கு இப்பொழுது எந்தத் திருத்தத்தையும் கொண்டு வரலாம். ஆனால், அரசியலமைப்புச் சட்டம் அமைக்கப்பட்ட பின் கொண்டு வருவதாக இருந்தாலும் கூட—Basic principles — அடிப்படைத் தீர்மானங்களுக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நா. க. குமாரதாஸன்,
நீர்கொழும்பு.

கே: துரோகிகள் ஏழுடன் ஒன்று கூட சேர்ந்துள்ளது. இன்னும் ஒன்றுதான் பாக்கி. எதற்கு சொல்லுங்கள் பார்க்கலாம்?

ப: 'நவக்கிரகங்கள்' ஆவதற்கு!

கே: தமிழரசுக் கட்சியின் தயவினால் வந்து ஒவ்வொரு முறையும் ஒவ்வொருவர் காட்டிக்கொடுக்கும் கயவர்களாகமாறுகின்றனரே இனி மேலாவது இப்படிப்பட்டவர்களை கட்சியில் சேராமல் விட்டாலென்ன?

ப: எதிர்காலத்தில் இவ் விஷயத்தை தமிழரசுக்கட்சி கவனமாகப் பரிசிலிப்பது அவசியமே!

கே: தமிழை ஆட்சிமொழியாக்கக் கோரும் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த தமிழ் துரோகிகளின் தேகத்தில் ஓடும் இரத்தம் என்ன இரத்தம்?

ப: நீலம் (நஞ்சு) கலந்த சிவப்பு இரத்தம்!

ஃ

க. குமரகுருசாமி
வல்வெட்டித்துறை

கே: இலங்கையின் பிரதமர் ஆக மாட்டின் வந்திருந்தால் இன்று நிலை என்ன?

ப: வெற்று மா(வு)டின்களுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டிருக்கும்!

கே: தமிழரசுத் தந்தை செல்வநாயகத்துக்கு பிறகு தலைவர்பதவி துரைரெத்தினத்துக்கு கிடைக்கும் என்று கூறுகிறார்களே உண்மையா?

ப: தலைவர் பதவியை எதிர்பார்த்து கட்சிக்கு வந்த வரல்லர் துரைரத்தினம்! கட்சியின் உண்மைத் தொண்டர்களில் அவரும் ஒருவரல்லவா?

ஃ

அ-அன்ரன் பீலிக்ஸ்
போயிட்டி

கே; தியாகராசா, ஆனந்தசங்கரி, அருளம்பலத்துடன் சி. எக்ஸ். மாட்டினை சேர்த்து விட்டால்?

ப: இனத்தோடு இனம் சேர்ந்துவிடும்!

ஃ

வேலு. சிவம்
மூதூர்.

கே: ''அம்பிட்டுத்துன் ஓங்கொண்ட புண்ணுடை நெஞ்சோடு - ஐய கும்பிட்டு வாழ்கிலேன் யான்'' என்றான் மாவீரன கும்பகர்ணன். திரு. மாட்டின் என்ன சொல்கிறார்?

ப: ஒத்துழைப்புப்பல்லவி பாடி தமிழர்களைக் கும்பகர்ணத்தூக்கம் போட வைக்கலாமா என்று பார்க்கிறார்!

ஃ

க. குகச்சந்திரன்
யாழ்ப்பாணம்

கே: இனி தமிழினம் போராட்டம் நடத்தாதா?

ப: போராட்டம் என்றால் ஒடிப்பதுங்குபவர்களே இனி தமிழினம் போராடாது என்று கூறி தமிழினத்தின் உறுதியை பாழடிக்க முயலுகிறார்கள். தமிழினம் தனது சுதந்திரத்தை பெறுமட்டும் போராடியே தீரும்.

ஃ

நா. கதிரவேற்பிள்ளை,
ஊரதீவு.

கே: தமிழ் அமைச்சர் குமாரசூரியர் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு செய்த உதவி என்ன?

ப: இதுவரைகாலமும்தமிழ் பெயரச்சு முத்திரைகளைக் கொண்ட தமிழ் பா.உ.க்களின் கடிதங்களை தபால் அலுவலகங்கள் ஏற்றுவந்தன. இப்போது, தமிழ் பா. உ.க்களும் சிங்களத்தில் பெயரச்சு முத்திரையை பொறித்தால்தான் அவர்களது 'அரச பணி' கடிதங்கள் ஏற்கப்படுமென்று உத்தரவிட்டிருக்கிறது குமாரசூரியரின் அமைச்சு. இதுதான் அவர் செய்த 'உதவி'. போதுமா?

ஃ

கலையழகன்,
வவுனியா-11;

கே: நான் ஒரு தமிழ் தியாகி என்று கூறுபவர்-தமிழ் கட்சியை சேர்ந்தவர், ஆங்கிலேயர் உடை அணிபவர், தமது பிள்ளைகளை தமிழ் படிக்கவிடாது சிங்களபாடசாலையில் சிங்களம் படிக்க அனுப்புவது பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: அப்படியானால் அவர் ஒருபோதும் தமிழ் தியாகியாக இருக்கமுடியாது. தமிழ்த் துரோகியாகவே இருக்க முடியும்!

ஃ

வீரவேலாயுதம்,
உடப்பு.

கே: தபால் தந்தி அமைச்சர் செல்லையா குமாரசூரியர் இப்போது என்ன செய்கிறார்?

ப: முதலையின் உயிர் இறுதியாகப் போகும் நாளை எதிர்பார்த்து நாட்களை ஒவ்வொன்றாக எண்ணி எண்ணி ஏங்கிக்கொண்டிருக்கலாம்!

கே: இன்றைய சோசலிசம் மக்களுக்கு என்ன நன்மையை அளித்திருக்கிறது?

ப: 'சோக' இஸத்தை!

ஃ

செல்வி. வை. அருந்ததி,
யாழ்ப்பாணம்.

கே: அரசியல் நிர்ணய சபையில் தமிழரசார் கேட்டதைவிட அதிக சலுகைகள் தமிழ் மக்களுக்கு தரப்பட்டுள்ளதாக தியாகராசா கூறியிருக்கிறாரே!

ப: பனி பிடித்தவர்களும், பதவி ஆசை பிடித்தவர்களும் இப்படி ஏதாவது உளறிக்கொண்டுதான் இருப்பார்கள்!

ஃ

ஜீ. சண்முகநாதன்
யாழ்ப்பாணம்

கே: கோப்பாய்த்தொகுயில் சுதந்திரக்கட்சி வேட்பாளராக கடந்த தேர்தலில் போட்டியிட்ட திரு. துரைராசாவை, வட பகுதி சுதந்திரக்கட்சியின் தலைமையில் இருந்து துரையப்பா—குமாரசூரியர் குழு கவிழ்த்து விட்டது போல், மாட்டினும், துரையப்பா—குமாரசூரியர் குழுவுக்கு அள்ளி வைப்பாரா?

ப: முற்பகல் செய்யின் பிற்பகல் விளையத்தானே வேண்டும்?

கே: கட்சிக்கு கட்சிதாவும் முன்னாள் சுதந்திரக்கட்சிக் காரரான துரைராசா, மாட்டினின் குத்துக்கரண விளையாட்டைப்பற்றி என்ன நினைப்பார்?

ப: பலே, நம்மை விட கரணமடிப்பதில் கெட்டிக்காரராக இருக்கிறாரே இவர், என்று நினைக்கக்கூடும்!

ஃ

செல்வி. கே. ஏ. தேவா
காங்கேசன்துறை

கே: யாழ் நாடாளுமன்ற உறுப்பினர் மாட்டின், இன நலன் என்றால் என்ன, கட்சி நலன் என்றால் என்ன என்பது பற்றி என்னுடன் பொதுமேடையில் விவாதிக்க வருவாரா?

ப: மாட்டார்! ... நீங்கள் தமிழரசுத் தந்தையின் தொகுதியைச் சேர்ந்தவர். தந்தையின் தொகுதியிலுள்ளவர்களுக்கு அரசியல் தெளிவு அதிகமென்பது அவருக்குத்தெரியும்.

ஃ

சு. விநாயகமூர்த்தி
கோளாவில் தெற்கு
அக்கரைப்பற்று

கே: பல்கலைக்கழகம் பற்றி தமிழ் மக்களுக்கு குமாரசூரியர் கொடுத்தவாக்குறுதி காற்றோடு காற்றாய் பறந்துவிட்டதே; அவர்தமிழ் மக்களுக்கு இன்னும் என்ன வாக்குறுதியளிக்கப் போகிறார்?

ப: ஏதாவது சொல்லிக் கொண்டேயிருப்பார்; நிறைவேறாத அவற்றை சுணை கெட்ட தினகரனும் முன்பக்கத்தில் அவரது படத்துடன் பிரசுரித்து அவரது மானத்தை வாங்கிக்கொண்டேயிருக்கும்; தமிழ் மக்களும் இந்த நகைச்சுவை காட்சியை ரசித்துக்கொண்டிருப்பார்கள். வாக்குறுதிகளும் காற்றோடு கலந்துகொண்டேயிருக்கும்!

ஃ

செல்வி. அங்கயற்கண்ணி
கொட்டடி.

கே: இன்றைய அரசாங்கத்தில் தமிழரசார் ஏதும் கேட்டுப் பெற்றிருக்கிறார்களா?

ப: 1968ம் ஆண்டு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சிங்கள பரீட்சையில் சித்தி பெறாமல்—அதன் பின் தேர்ச்சிபெற்ற புதிய அரசாங்க ஊழியர்களுக்கு அநீதியான முறையில் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் சம்பள உயர்வும் முது முறையும் உடனடியாக வழங்கப்பட வேண்டுமென தமிழரசார் கோரியிருந்தனர்; நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சம்பள உயர்வினை வழங்க அரசு இப்போது நடவடிக்கையெடுத்து வருவதாகப்பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> 194ஏ, பண்டாரநாயக்கா வீதி
> கொழும்பு—12

ஃ

நவம்
ஏரூவூர்

கே: காவடி அதிகம் அலட்டுகிறதே; காரணம் என்ன?

ப: அறளை பெயர்ந்து விட்டதுதான்!

கே: மூதூர் தங்கத்துரை பற்றிய பொய்ச் செய்திகளை தினபதியார் ஏன் இவ்வளவு அக்கறையுடன் பிரசுரிக்கிறார்?

ப: தனது துரோகவலையில் தங்கத்துரை சிக்க மாட்டாரா என்று நப்பாசை பிடித்து நோட்டம் விட்டுப் பார்க்கிறார்; அவ்வளவு தான்!

ஃ

ந. இராசநாயகம்
கிளிநொச்சி

கே: மட்டக்களப்பு பா: உ: திரு. செ. இராசதுரை ஏன் மாட்டின் விவகாரத்தில் தலையிடவில்லை?

ப: கட்சிப் பொதுச்சபைத் [illegible] பூரணமாக ஏற்றுக் கொள்ளும் போது உங்கள் கேள்வி எழுவதற்கு காரணமேயில்லையே!

ஃ

வி: திருச்செல்வம்
சங்கானை

கே: கட்சிவிட்டு கட்சி மாறுபவர்களைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: அடிக்கடி கணவனை மாற்றும் 'கற்பரசிகளுடன்'!

ஃ

சு. தனபாலசிங்கம்
254, 2ம்யூனிற்
முரசுமோட்டை

கே: ஆட்சியாளரின் கடைக்கண்பார்வைக்காக தம் இரு கண்மணிகள் போன்ற கன்னித் தமிழ் மொழியையே தியாக(ர்)ஞ் செய்தவர்களில் ஒருவர் ''த. அ. பா. உ. களுக்கு மானமிருந்தால் பா. உ; பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டும்.'' என்று அரசியல் அறிவுரை வழங்கியுள்ளாரே. ஏன்?

ப: பைத்தியம் அதிகரித்து விட்டதால்!

கே: த.அ.பா. உக்களுக்கு அறிவுரை வழங்கும் அளவிற்கு இந்த மானமிழந்தவருக்கு எங்கிருந்து ஞானம் பிறந்தது?

ப: தினபதியாரிடமிருந்து!

ஃ

செ. கற்புக்கரசி
நொச்சிமோட்டை

கே: வவுனியா எம்: பி: செல்லத்தம்புவும் யாழ்நகர் எம். பி. மாட்டினும் உற்ற நண்பர்களா?

ப: அரசியலில் வெவ்வேறு முகாம்களில் இருந்தாலும் தனிப்பட்ட முறையில் நண்பர்களாக இருப்பதுதான் சனநாயகத்திலுள்ள தனிச் சிறப்பு!

ஃ

சி: தவராஜா,
மானிப்பாய்.

கே: உலகத்தில் எந்தெந்த நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள்?

ப: இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, இந்தோனேசியா, மோரிஷியஸ், தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில்!

கே: எந்தெந்த நாடுகளில் தமிழர்களுக்கு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் இருக்கிறது?

ப: இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில்!

ஃ

கலாநாதன்,
அல்வாய்.

கே: தமிழரசுக் கட்சியில் இருந்து விலகுபவர்களையும் தமிழரசுக் கட்சியைத் தூற்றுபவர்களையும் இலங்கை ஏடுகள் ஏற்றிப் போற்றுவதேன்?

ப: தமிழரசுக் கட்சியை எப்படியும் ஒழித்துக்கட்டி விடும் சதி நோக்கம்தான்!

ஃ

கே. செல்லையா,
பரந்தன்.

கே: உழைக்காமல், மற்றவர்களை ஏமாற்றி வாழ்பவர்களை யாருடன் ஒப்பிடலாம்?

ப: ஒரு கட்சியின் வளர்ச்சியில் பங்குகொண்டு உழைக்காது, மற்றவர்களின் தன்னலமற்ற உழைப்பினால் கட்சி வளர்ச்சியடைந்த பின் அக்கட்சியில் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டு, பா. உ. பதவியை பெற்றுக்கொண்டதும், குத்துக்கரணமடித்து கட்சிக்கு துரோகம் செய்யும் அரசியல்வாதிகளுடன் ஒப்பிடலாம்!

ஃ

ந: பரமேஸ்வரன்
ஆரையம்பதி-3.

கே: வட்டுக்கோட்டை விட்ட பிழையைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: வரலாற்றில் அது ஒரு தீராத வடுவாக அமையப் போகிறது. தமிழர்களின் அடிமைச் சாசனமாக அமையப்போகும் புதிய அரசியல் அமைப்புக்கு ஆதரவாக வட்டுக்கோட்டை பா. உ. திரு. தியாகராசா கையெழுத்திடப்போகிறார் என்றால், அவரை ஆதரித்த அனைவருக்குமே அது ஒரு தீராத களங்கம் என்பதில் ஐயமில்லை!

ஃ

செ: புவனநாயகி,
நொச்சிமோட்டை.

எஸ். சோதி,
வயிரவ புளியங்குளம்;

கே: திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தைப் பற்றி சில வரிகள்.........?

ப: கடந்த தேர்தல் முடிந்து வெற்றிதோல்விகள் அறிவிக்கப்பட்டபின்னர், வட்டுக்கோட்டைத் தொகுதியில் இரண்டு பா: உ: களுடன் தாம் தேர்தலில் மோத வேண்டியிருந்ததென்று கூறினாராம் தியாகராசா; இரண்டு பா. உ.க்கள் என்று அவர் குறிப்பிட்டது திரு. அமிர்தலிங்கத்தையும், திருமதி மங்கையர்க்கரசியையும் தான். அவ்வளவுதூரம் மக்களுக்கிடையே செல்வாக்குப் பெற்றவராக திகழுகிறார் மங்கையர்க்கரசி. மக்கள் தொண்டாற்றுவதிலும், கட்சிப்பணி புரிவதிலும் தனது கணவனுக்கு சற்றும் சளைத்தவரல்லர் திருமதி மங்கையர்க்கரசி. தமிழின உரிமைப் போராட்டங்களில் ஈடுபட்டு கணவருடன் சிறைசென்ற வீரத் தமிழ்ப்பெண் இவர். இந்திய சுதந்திரப் போரில் ஒரு சரோஜினிநாயுடு என்றால் ஈழத் தமிழர விடுதலைப் போருக்கு ஒரு மங்கையர்க்கரசி என்பேன்.

ஃ

ஏ: குலசிங்கம்:
மரையடித்தருளம்.

கே; வெங்கலத்தில் தயாரிக்கப்படும் அரசியல் சாசனத்தில் கையொப்பமிடும் தமிழ் பா. உ.க்களை எப்படி அழைக்கலாம்?

ப: ஈழத் தமிழினத்தின் பச்சைத் துரோகிகள் என்று இவர்களை தமிழ் இனம் பிரகடனப்படுத்த வேண்டும்!

ஃ

எம். முருகையா
கொழும்பு-6

கே: சொல்லின் செல்வரும், எழில் தமிழ் ஆளருமான இராசதுரைக்கு சொற்பஞ்சமும், எண்ணிய எண்ணியாங்கு வெளியிடுவதில் கஷ்டமும் தடுமாற்றமும் இருப்பதாக கூறியிருக்கிறாரே தினபதியார்?

ப: தீட்டிய மரத்தில் கூர் பார்ப்பதும் செய்ந்நன்றி கொல்வதும் தினபதியாருடன்கூடப்பிறந்த குணம் என்பது உங்களுக்குத் தெரியாதா? தினபதியார் சுதந்திரனில் இருந்தபோது அவருக்கு முறையாகத்தமிழ் எழுதுவது எப்படி யென்பதையும், ஆரம்ப அரசியல் அறிவையும் கற்றுக்கொடுத்தவர் இராசதுரை யென்பதையும் மறந்து கண்ணியமின்றி இன்று அவரைத்திட்டுகிறார் என்றால்தினபதியாரின் 'பண்பாடு' எப்படிப்பட்டதென்பதை அறிந்துகொள்ளுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிச் சிங்களச் சட்டத்தை தமிழரசுக் கட்சி ஒருபோதும் ஏற்கவுமில்லை ஏற்கவும் மாட்டாது!

## கூலிக்கு மாரடிக்கும் போலித் தமிழர்களைப் பயன்படுத்தி

## வீரத் தமிழினத்தின் விடுதலை உணர்வை நசுக்கிவிட முடியாது!

## அரசியல் நிர்ணயசபையில் மூதூர் தங்கத்துரை விளாசல்!

## ஆளுங்கட்சிக்கு எச்சரிக்கை; தமிழ்த்துரோகிகளுக்கு சாட்டை!

ஒரு புதிய அரசியலமைப்பை நாங்கள் வகுக்கின்றபொழுது சிறுபான்மையினருக்குத்தான் பாதுகாப்பு அளிக்க வேண்டியது மிக முக்கியம்: ஆனால், இங்கே சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்ற வரைவு அரசியலமைப்பில் இந்நாட்டிலே வாழுகின்ற பெரும்பான்மை இனத்துக்குத்தான் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கின்றதென்பதை இங்கே சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்ற அடிப்படைத் தீர்மானங்கள் எங்களுக்கு நன்றாக எடுத்துக்காட்டுகின்றன.

பாஷை ஒரு பிரச்சினையாக எழுப்பப்பட்டது 1955 ஆம் ஆண்டில்தான். அதற்கு முன்பு எல்லா கட்சிகளும், தமிழுக்கும் சிங்களத்துக்கும் இந்த நாட்டிலே சம அந்தஸ்து வேண்டும்; இதை ஒரு பிரச்சினையாக எடுக்காமல் இதற்குச் சுமூகமான வழியிலே தீர்வு காணவேண்டுமென்று விளைந்தார்கள்.

1955 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19 ஆம் தேதி கௌரவ கலாநிதி என். எம். பெரேரா அவர்கள் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வேண்டுமென்று சொல்லி இச்சபையிலே ஒரு தனி அங்கத்தவர் பிரேரணையைக் கொண்டு வந்தார்கள்.

### சம உரிமை கோரியவர்கள்

நாங்கள் கௌரவ கலாநிதி என். எம். பெரேரா அவர்களையோ அல்லது கௌரவ கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா அவர்களையோ பற்றிப் பேசுகின்றபொழுது, அல்லது அவர்களுடைய மேற்கோள்களை இங்கே எடுத்துக்காட்டுகின்றபொழுது, அவர்களை இழிவுபடுத்துவதற்காகவோ குறை கூறுவதற்காகவோ அவ்வாறு செய்யவில்லை. அவர்கள் அந்தக் காலத்திலே எவ்வளவொரு உண்மையைக் கூறினார்கள்; அந்த உண்மையிலேயிருந்து இன்று அவர்கள் அப்பால் சென்று விட்டார்களே — அதை மாற்றிக் கொண்டுவிட்டார்களே என்ற மனவேதனையைத்தான் நாங்கள் இங்கே எடுத்துக்கூறுகின்றோம்.

லங்கா சமசமாஜக் கட்சி அன்று தொடக்கம் இன்று வரையும் இந்த நாட்டிலே வாழுகின்ற எல்லா இனத்தவர்களுக்கும் சம உரிமை கிடைக்க வேண்டுமென்று பாடுபட்டு அதனால் பல இம்சைகளுக்குள்ளாக்கப் பட்டு வந்திருக்கின்றது. ஆகவே, அவர்களின் பேச்சிலே மேற்கோள்களை எடுத்துக் காட்டுகின்றபொழுது அவர்களை இழிவு படுத்தும் நோக்கத்துடன் அவற்றை நாங்கள் இங்கே எடுத்துக் காட்டவில்லை.

ஒரு காலத்தில் உங்களுக்கு உண்மையாகப் புலப்பட்டது இப்பொழுது நாங்கள் எடுத்துக்காட்டும் பொழுது ஏன் பிழையாகத் தென்படுகிறது: ஏன் என்று நான் கேட்க விரும்புகிறேன். லங்கா சமசமாஜக் கட்சி இந்த பிரச்சினையில் தலையிடும்பொழுது இது நேர்மையானதாக, நியாயமானதாக இருந்தது; இந்த நாட்டிலே ஒற்றுமை நிலவ வேண்டுமானால் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வேண்டும் என்று அன்று எடுத்துக்காட்டினார்கள். அப்படிக் கூறும்பொழுது, நாங்கள் அரசியலிலிருந்து ஒதுக்கப்பட்டு விடுவோம் என்று அஞ்சவில்லை.

### என். எம். அன்று கூறியது

அதற்கு உதாரணமாக, கலாநிதி என். எம். பெரேரா அவர்கள் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்துக் கொடுக்க வேண்டும் என்று தனி நபர் பிரேரணையில் ஒக்ரோபர் மாதம் 19 ஆம் தேதி பேசிய பேச்சை ஹன்சாட் 1955/56 ஆம் ஆண்டு தொகுதி 23 பத்தி 574 யிலிருந்து இங்கு வாசித்துக் காட்ட விரும்புகிறேன்:

"But our party has taken up a consistent attitude. Ever since our party was launched, we have never faltered or wavered from that position because we felt that that was the correct line to take. That position we still adhere to However unpopular that line of action might be, I am convinced myself of the correctness of our attitude. It might mean going into the political wilderness for some time, but still we the members of the members of the Lanka Sama Samaja Party are prepared to face that. Let there be no mistake about it..

That is, for a just cause, for correct principles. for a correct political line, I think it is fully worth it. The membership of the House is not the be-all and end all of a political party has been built on careerism, then, I think, the right hon. Gentleman is quite correct when he says that it will have to go into the wilderness.— [OFFICIAL REPORT, 19th October, 1955; Vol 23, c. 574.]

நான் இந்த மேற்கோள்களை எடுத்துக் காட்டுகின்றபொழுது, நான் என்ன கருத்தை வெளிப்படுத்த முயல்கின்றேனென்றால், கௌரவ கலாநிதி என்.என்! பெரேரா அவர்கள் நேற்று இச்சபையில் 'நாங்கள் உங்களுக்காகக் கஷ்டப்பட்டிருக்கிறோம்' என்று குறிப்பிட்டார். நாங்கள் அதை மறக்கவில்லை. ஆனால், நீங்கள் ஒரு நியாயமான கோரிக்கைக்காக—கொள்கைக்காக கஷ்டப்பட்டிருக்கிறீர்கள் என்பதைத் தான் எடுத்துக்காட்டினேன்.

1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் இச்சபையிலே சமர்ப்பிக்கப்பட்டதும், நாங்கள் அதை எதிர்த்தோம். இந்த நாட்டிலே சிறுபான்மையினமாக இருக்கின்ற நாங்கள் சுயமரியாதையுடனும் சுயகௌரவத்துடனும் வாழவேண்டுமென்றால், எங்கள் மொழிக்கும் சம அந்தஸ்துக் கொடுக்க வேண்டுமென்று கோரினோம்.

### மொழி உரிமையும் பாதுகாப்பும்

சம அந்தஸ்து என்று நாங்கள் கோரும்பொழுது, அரசாங்க சேவையிலே, சிங்கள மக்களுக்குச் சரிபாதியும் தமிழ் மக்களுக்குச் சரிபாதியும் என்று நாங்கள் கோரவில்லை. இதை ஒரு பொருளாதாரப் பிரச்சினையாக மாற்றுகின்றவர்கள் கூறுவதுபோல் நாங்கள் அப்பிரச்சினையை எடுத்துக்கொள்ளவில்லை. நாங்கள் கேட்டுக் கொள்வது எங்களுடைய மொழிக்கு உரிய இடத்தைத் தாருங்கள் என்பதுதான். அந்த இடம் சம அந்தஸ்துதான் என்பதை எடுத்துக் கூறினோமே தவிர பொருளாதார அடிப்படையிலே சிந்தித்து. தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்துக் கிடைத்தால் தமிழ் மக்களுக்கு அரசாங்க சேவையிலே சரிபாதி கிடைக்கும் என்ற நோக்கத்துடன் இக் கோரிக்கையை நாங்கள் இங்கே கொண்டுவரவில்லை.

எங்கள் கோரிக்கை ஒரு நியாயமான கோரிக்கை என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த நாடு ஒற்றுமையான ஒன்றுபட்ட நாடாகத் திகழவேண்டுமென்றால் அந்தக் கோரிக்கை ஒரு நியாயமான கோரிக்கை என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்த நாடு ஒற்றுமையான ஒன்றுபட்ட ஒரு நாடாகத் திகழ வேண்டுமானால் இந்நாட்டிலே வாழும் எல்லா இனத்தவர்களுக்கும் எல்லா மதத்தவர்களிக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். அவை அரசியல் அமைப்பிலே இடம்பெற வேண்டும்என்பதுதான் எமது வேண்டுகோள்.

தமிழுக்குச் சம அந்தஸ்து கொடுத்தால் சிங்களம் அழிந்துவிடுமா என்று சிலர் கருதுகின்றார்கள். ஆனால் ஆங்கிலம் அரச கருமமொழியாக இருந்தபொழுது இந்நாட்டிலே சிங்களம் அழிந்துவிடவில்லை என்று நீங்களே கூறியிருக்கிறீர்கள். கிராம மக்கள் சிங்களத்தைப் பாதுகாத்துப் பேணி வந்திருக்கின்றார்கள். என்று கூறினீர்கள். அதேபோன்றுதான் தமிழுக்குச் சம அந்தஸ்து கொடுத்தால் சிங்களம் இந்நாட்டிலே இருந்து அழிந்துவிடாது என்பதை நாம் மீண்டும் உங்களுக்குக் கூற விரும்புகின்றேன்.

### தனிச் சிங்களச் சட்டத்தை ஏக்கவில்லை

நாம் தமிழுக்குச் சம அந்தஸ்துக் கேட்காமல் தனிச் சிங்களச் சட்டத்தை ஏற்றுக் கொண்டோம் என்று இந்தச் சபையிலே எத்தனையோ தடவைகள் கூறினார்கள். நாம் எந்தக் காலத்திலும் தனிச் சிங்களச் சட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. அன்று தொடக்கம் இன்றுவரை தமிழுக்கும் சம அந்தஸ்து வேண்டுமென்று வாதாடி வந்திருக்கின்றோம் என்பதை உங்களுக்கு மீண்டும் எடுத்துக்கூறவேண்டிய அவசியமில்லை;

இன்று [illegible] அவதானித்தால், 'தமிழுக்கு இந்த இடம் போதும், இதற்கு மேல் என்ன இடம் கேட்கின்றீர்கள், நாம் நியாயம் என்று கருதுவதை நீங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்' என்று ஒரு சாரர் கருதுவதாகத் தெரிகின்றது. இப்படியான கருத்தை நாம் பல பேச்சுக்களிலிருந்து கண்டோம். நீங்கள் எங்களோடு கலந்தாலோசிக்காமல், நீங்களே நியாயமென்று தீர்மானித்ததை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டுமென்று கருதினால் அது மிகவும் தவறானது. எமது கட்சியோ, தமிழ் இனமோ ஒரு காலமும் அதை ஏற்றுக் கொள்ளாது என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

ஒரு சாரார் தமிழ் இனத்தின் வாக்குகளைப் பெற்று இங்கு வந்து தமிழ் இனத்தையே விற்பதற்குத் தயாராக இருக்கின்றார்கள். அதனை மிகவும் வேதனையோடு எடுத்துக்கூற விரும்புகின்றேன். தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே வென்றுவிட்டால் சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து விடும், ஆகவே அவர்களை நீங்கள் ஆதரிக்கக் கூடாது, நாம்தாம் வடக்கிலே ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள், ஆகவே எங்களைத்தான் நீங்கள் ஆதரிக்கவேண்டும் என்று அவர்கள் தேர்தல் காலங்களிலே மேடைகளிலே கூறினார்கள். ஆனால் இன்று சோஷலிசம் பேசுகின்றார்கள்.

திரு. ஆனந்தசங்கரி;— யார் கூறியது?


திரு. தங்கத்துரை:— 'நண்பர் யார் கூறினார்கள் என்று கேட்கின்றார். எத்தனையோ தேர்தல் மேடைகளிலே தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர்கள் கூறியதைத் தான் நான் கூறுகின்றேன். இப்பொழுது அவர்கள் தமிழ்க் காங்கிரசை விட்டு விலகி வேறு கட்சியில் சேர்ந்துவிட்டார்களோ என்பது எனக்குத் தெரியாது;

அன்று அப்படிக் கூறியவர்கள், இன்று நாம் சோசலிசத்தை ஏற்க மறுக்கின்றோம் வகுப்பு வாதத்தைக் கிளப்புகின்றோம் என்று கூறுகிறார்கள். அவர்கள் பேசுவது என்ன? தேசியக் கட்சி என்று தங்களை அழைக்கிறார்கள். ஆனால் தேசியப் பிரச்சினைகளில் தமிழ் அரசுக் கட்சி தலையிடக் கூடாது என்று சொல்லுகிறார்கள். இந்த அடிப்படைத் தீர்மானங்களுக்கு ஏன் திருத்தப் பிரேரணைகளைக் கொண்டு வந்தீர்கள் என்று எங்களைக் கேட்கிறார்கள். இந்தத் திருத்தப் பிரேரணைகளைக் கொண்டு வராது விட்டால் மொழிப் பிரச்சினையில் தீர்வு காண முடியுமே, அதற்கு இந்தச் சபை ஒரு முடிவு கண்டிருக்குமே என்றெல்லாம் பேசுகிறார்கள்.

கட்சி தேசியக் கட்சியாக இருந்தால் அதற்கு மக்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் இருக்கும். அதற்குத் தேசியப் பிரச்சினைகளில் தலையிட வேண்டிய அவசியமும் இருக்கும். எங்கள் கட்சிக் கொள்கைக்கு இணங்க நாங்கள் அடிப்படைத் தீர்மானங்களுக்கு திருத்தப் பிரேரணைகளைச் சமர்ப்பித்துவிட்டு பின்னர் சுயநலத்திற்காக வாபஸ்பெற்றவர்களைப் போன்றவர்கள் அல்ல நாங்கள்.

திரு. அருளம்பலம்;— என்ன சுயநலத்திற்காக?

திரு. தங்கத்துரை:— தேர்தல் காலங்களில் தமிழ்



அரசுக் கட்சி சம அந்தஸ்தைக் கைவிட்டு விட்டது என்றும் நாங்கள் வெற்றிபெற்றால்தான் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்துக் கிடைக்கும் என்றும் கூறிய தமிழ்க் காங்கிரஸ் காரர்கள், இன்று இங்கு வந்து, 'கிடைத்தது போதும்; இங்கே கிடைத்ததே அதிகமாக இருக்கிறதே; இதிலிருந்து குறைந்தாலும் போதும்' என்று ஓடுகொண்டு பிச்சை கேட்கிறார்கள். பிச்சை எடுப்பதை அரசாங்கமும் அனுமதிக்காது என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எச்சிலை இன்று நன்றியுடன் வரவேற்கிறார்கள்.

### கூலிக்கு மாரடிப்பவர்கள்!

தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து வேண்டுமென்று கேட்டவர்கள், தமிழ் அரசுக்கட்சி மீண்டும் வெற்றி பெற்றால் தமிழ் இனத்திற்கு அழிவு என்று கூறியவர்கள் இன்று இந்த நிலைக்கு வந்திருக்கிறார்கள். அங்கு அவர்கள் நேற்றுப் பேசிய பேச்சு மூலம் தமிழ் மக்களின் உரிமைக்கு அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்துவிட்டார்கள் தமிழ்க்காங்கிரஸ் நண்பர்கள். தமிழ் இனம் இவர்கள் பின்சென்றால் சுயகௌரவம் இழந்து மானம் இழந்து வாழவேண்டிய நிலைக்கு வரும் என்பதை இச்சபையில் கூற விரும்புகிறேன். அவர்கள் கூறுவதை ஏற்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் அதைத் தமிழ் இனம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.

இங்குள்ளவர்களில் பலர் அறிந்திருக்கக்கூடும் கூலிக்கு மாரடிப்பதைப்பற்றி அந்தக்

(11-ம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின நலனுக்கும் இயக்க வளர்ச்சிக்கும்

# அயராது பாடுபடும் செயல்வீரர்!

வீரம் செறிந்த பார்வை; அரிமாவின் மிடுக்கான நடை; எதிரிகளை கிடுகிடுக்க வைக்கும் கணீர் என ஒலித்திடும் வெங்கலத் தொனி; கொள்கை உறுதியைக் காட்டும் தெளிவான வார்த்தைகள்; பரந்த அறிவைக் உணர்த்தும் விரிந்த நெற்றி; அனுபவ முத்திரையை எடுத்துரைத்திடும் வழுக்கை விழுந்த தலை; ஆஜானுபாகுவான தோற்றம்; இத்தகைய ஒரு மனிதர் கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக ஈழத் தமிழினத்தின் விடுதலைக்காக அமைதியாக உழைத்து வருகிறார்!

தமிழரசுக்கட்சி மேடைகளிலெல்லாம் இந்த மனிதரைக் கண்டிருப்பீர்கள். பதவி ஆசையோ, வேறு சுயநல நோக்கங்களோ சிறிதுமின்றி கட்சியின் வளர்ச்சிக்காகவும், இனத்தின் நல்வாழ்வுக்காகவும், தன்னுடைய வாழ்வின் பெரும்பகுதியை அர்ப்பணித்திருக்கும் கட்சியின் உண்மைத் தொண்டர்களுள் ஒருவர் இவர். கட்சியால் தனக்கென்ன இலாபம் என்று கருதாது, தன்னால் கட்சிக்கு என்ன இலாபம் என்று கருதும் பண்பாளர் இவர். யார் இவர் என்கிறீர்களா? இன்னும் உங்கள் பொறுமையைச் சோதிக்க நான் தயாராக இல்லை. இத்தகைய பெருமைக்குரியவர்தான் நமது வழக்கறிஞர் சு. நடராசா அவர்கள்.



தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத்தலைவர்களில் ஒருவராக—கட்சியின் ஆரம்பகால வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த சிலரில் ஒருவராக—வச்சிர நெஞ்சு கொண்ட விடுதலை வீரனாக—விளங்குபவர் நடராசா அவர்கள்.

மரம் பழுத்திடும் நேரத்தில் வௌவால்கள் பழத்தை சாப்பிடும் சுயநல நோக்குடன் மரத்தை நோக்கி வருவதுண்டு. அதுபோல ஒருகட்சி மக்களிடம் செல்வாக்குப் பெற்றபின், கட்சியால் இலாபம் பெறுவதை மட்டுமே நோக்கமாகக்கொண்டு கட்சியில் சேர்ந்து 'இலாபத்தை' பெற்றவுடன் கட்சிக்கு துரோகம்புரிந்து குத்துக்கரணமடித்திடும் அரசியல் வாதிகள் பலர் இந்நாட்டில் இருக்கிறார்கள்.

ஆனால் நடராசா அவர்கள் அத்தகைய அரசியல்வாதியல்லர். தமிழரசு எனும் விதையை ஊன்றி, வியர்வை, கண்ணீர், இரத்தம் எனும் நீருற்றி, தியாகமெனும் உரத்தையிட்டு கட்சியை வளர்த்தவர்களில் நடராசாவும் ஒருவர். ஆடு, மாடுகளும், ஏனைய மிருகங்களும், தமிழரசுப்பயிரை மேய்ந்து விடாதபடி கண் விழித்து, காத்து நின்றவர் — இன்றும் காத்து நிற்பவர்—நடராசா அவர்கள்.

தமிழரசு 'மரம்' பழுக்கத் தொடங்கிய காலத்திலும், பழத்தின் மீது ஆசைப்படாது, மரத்தை காத்து நிற்பதையே தமது கண்ணினுமினிய கடமையாக கருதி வந்தவர் — கருதிவருபவர்— நடராசா அவர்கள். இலை மறைகாயாக இருந்து இனத்தின் நல்வாழ்வுக்கு உழைத்து வரும் இனியவர் இவர்.

## வாழ்க்கைக் குறிப்பு

ஈழத்தமிழினத்தின் விடுதலைக்காக இடையறாது உழைத்துவரும் நடராசா அவர்கள் பிறந்தது பர்மாவில் என்றால் ஆச்சரியப்படாதீர்கள்.

இவரது தந்தையார் மல்லாகத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சுப்பிரமணியம். தாயார் பெயர் சுந்தரம். இவரது தந்தையார், பர்மாவின் தலைநகராகிய றங்கூனுக்கு 'திரைகடலோடியும் திரவியம் தேடும், நோக்குடன் சென்று ரங்கூனிலிருந்து நூறு மைலுக்கு அப்பாலுள்ள புகையிரத நிலையமொன்றில் நிலைய அதிபராக கடமை புரிந்தார். அக்காலத்தில், பர்மாவில் 1911ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி பிறந்தவர் தான் நமது நடராசா அவர்கள்.

## கல்வி

1927ம் ஆண்டு இரங்கூன் பல்கலைக்கழகத்தில் புகுந்து கலைப்பிரிவில் இன்டர்மீடியேட்வரை படித்து பரீட்சை எழுதினார்; ஆனால் அவர் ஈழம் வரவேண்டும் — இனத்துக்காக உழைக்கவேண்டுமென்று விதி இருக்கும்போது இரங்கூன் பரீட்சையில் சித்தியெய்த முடியுமா?

1929ம் ஆண்டு சித்திரை மாதம் பெற்றோருடன் ஈழம் வந்த நடராசாவை, அவரது உறவினர்கள் இங்கே தங்கும்படி கோரி தொடர்ந்து இங்கு படிப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். தமது உடன் பிறவாத் தமையனார் சின்னப்பு மனுநாயகம் அவர்களின் உதவியுடன், கொழும்பு சாகிராக் கல்லூரியில் சேர்ந்துபடித்தார் நடராசா. அக்காலத்தில் சாகிராகல்லூரி திரு. வி. முத்துக்குமார் எம். ஏ. அவர்களது மேற்பார்வையின் கீழ் இருந்தது குறிப்பிடத்தக்கது.

சாகிராக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் 1930 ஆண்டு தைமாதம் பர்மாவில் தமது தந்தை காலமான செய்தி வரவே, பர்மா சென்று தந்தைக்கு ஆற்றவேண்டிய இறுதிக்கடன்களை ஆற்றிவிட்டு, தாயாரையும் சகோதரியையும் அழைத்துக்கொண்டு ஈழம் திரும்பினார் நடராசா.

1938ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வழக்கறிஞராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட நடராசா அவர்கள், கடந்த 32 ஆண்டுகளாக மல்லாகம் நீதிமன்றத்தில் ஒரு பிரபல சீனியர் வழக்கறிஞராக கடமை புரிந்து வருகிறார். இன்று மல்லாகம் நீதிமன்றத்தில் கடமை புரியும் ஒரேயொரு 'கிறிமினல்' வழக்கறிஞர் இவரே!

## இல்வாழ்க்கை

தமிழ்காங்கிரஸ் காரரான திரு. ஆர். என். சிவப்பிரகாசம் அவர்களது சகோதரி திருமதி சத்தியவதி அம்மையாரைத்திருமணம் செய்து கொண்ட நடராசா அவர்களுக்கு, நான்கு பெண்களும், இரண்டு ஆண்களும் இருக்கிறார்கள்.

திரு. சிவப்பிரகாசம் தமது சொந்த மைத்துனராக இருந்தபோதிலும் தமது அரசியல் கொள்கையை உறவுக்காக விட்டுக்கொடுக்காத கொள்கை வீரராக நடராசா திகழுகிறார். பொதுத்தேர்தலில் தமிழரசுத்தந்தையை எதிர்த்து சிவப்பிரகாசம் போட்டியிட்ட நேரத்திலும், உறவைவிட கொள்கையையே பெரிதாக மதித்து, தமிழரசுத்தந்தையின் வலதுகரமாக பணியாற்றியவர் நடராசா அவர்கள்.

## அரசியல் ஈடுபாடு

திரு. நடராசா அவர்களுக்கு சிறு வயதிலிருந்தே அரசியலிலும், பொதுத் தொண்டிலும் ஈடுபாடு அதிகமாக இருந்தது. 1927ம் ஆண்டு மகாத்மாகாந்தி அவர்கள் றங்கூனுக்கு விஜயம் செய்த நேரத்தில், மகாத்மாவை வரவேற்கும் குழுவில் ஒரு தொண்டராக இருந்து இவர் பணியாற்றியுள்ளார்.

1931ம் ஆண்டு முதல் இலங்கைத் தமிழர்களின் அரசியலில் திரு. நடராசா ஈடுபாடு காட்டத்தொடங்கினார். சேர். பொன். இராமநாதன் அவர்களின் மறைவினால் இலங்கை சட்டசபையில் காலியான இடத்துக்கு 1931ம் ஆண்டு தேர்தல் நடைபெற்ற நேரத்தில், அந்தேர்தலில் போட்டியிட்ட வி. முத்துக்குமார் எம். ஏ. அவர்களை ஆதரித்து நடராசா தீவிரபிரசாரம் செய்தார்

பின்னர் 1943—1944ம் ஆண்டுகளில் தமிழன் என்று

## உரிமைப் போராட்டங்களில் கலந்துகொண்டு

## அடிமைத் தளையறுக்கப் போராடிவரும் கொள்கைவாதி!

சொல்லடா—தலை நிமிர்ந்து நில்லடா என்ற கோஷத்துடன் தமிழ் மக்களுக்காகப் போராடுவதற்கு தமிழ் காங்கிரஸ் என்ற ஸ்தாபனம் தோற்றுவிக்கப்பட்ட நேரத்தில் திரு. நடராசாவும் அதில் சேர்ந்து உழைக்கத் தொடங்கினர்.

1949ல், தமிழ் காங்கிரசின் அடிப்படைக்கொள்கைகளை திரு. பொன்னம்பலம் காற்றில் பறக்கவிட்டு—மலைநாட்டுத் தமிழர்களை காட்டிக் கொடுத்து—மந்திரியான நேரத்தில் தமிழ் காங்கிரஸ் பிளவுபட்டதல்லவா? காங்கிரஸ் கொள்கைகளை காப்பாற்றுவதற்காக பொன்னம்பலத்தை விட்டு செல்வா, வன்னியசிங்கம் நாகநாதன் போன்றோர் அன்று பிரிந்த போது, அவர்

## அறுபதாண்டு காணும் அன்பர் நடராசா

### பல்லாண்டு வாழ்ந்திடுக; பைந்தமிழைக் காத்திடுக!

களுடன் சேர்ந்து நடராசாவும் வெளியே வந்தார்.

தமிழரசுக்கட்சி 1949ம் ஆண்டு, டிசம்பர் 18ம் நாள் துவக்கப்பட்ட நேரத்தில், கட்சித் தூண்களில் ஒருவராக நின்றவர் திரு. நடராசா அவர்கள்; அன்று முதல் இன்று வரை கட்சியின் வளர்ச்சிக்காகவும், தமிழின முன்னேற்றத்துக்காகவும் உழைத்து வருகிறார்.

## பத்திரிகை ஆசிரியர்

திரு. நடராசா அவர்கள் பத்திரிகை ஆசிரியராகவும் கடமை பார்த்து இருக்கிறார். கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து சில ஆண்டுகளாக [illegible] பத்திரிகையை கட்சி வெளியிட்டு வந்தது: அப்பத்திரிகையின் ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் கடமையாற்றியவர் நடராசா: அப்பத்திரிகை நடத்தியதன் மூலம் பல நஷ்டங்களையும் ஏற்றுக்கொண்டவர் இவர்.

## போராட்ட வீரர்

தமிழரசுக்கட்சி நடத்திய அத்தனை போராட்டங்களிலும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டவர் நடராசா.

- 1956ம் ஆண்டு ஆனி 5ம் நாள் காலிபேஸ் திடலில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு காடையர்களின் தாக்குதலுக்கு உள்ளானார்.
- 1956ம் ஆண்டு நடைபெற்ற பிரசித்திபெற்ற கட்சியின் திருமலை யாத்திரையை ஒழுங்கு செய்தவர்களில் இவரும்ஒருவர். யாத்திரையிலும் கலந்துகொண்டார்.
- 1958ம் ஆண்டு சிறீ எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றார்.
- 1958ம் ஆண்டு இனக் கலவரத்தின்போது மூன்று நாட்கள் யாழ்ப்பாணம் மறியற்சாலையில் அடைக்கப்பட்டிருந்தார். பின்னர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.
- 1961ம் ஆண்டு நடைபெற்ற மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தீவிரமாக பங்கு கொண்டுழைத்தார்; தபால் சட்டத்தைமீறி-தமிழ்ப்பகுதிக்கு தனித்தமிழ் முத்திரையை வெளியிட்டு, தனி தபால் நிலையம் நடத்தியபோது, தமிழரசுத் 'தபால் அதிபராக' கடமையாற்றினார்: இப்போராட்டத்தின் போது, பொலிசாரின் குண்டாந்தடி இவரது மொட்டந்தலையைப் பதம் பார்த்தது. இம்முறையும் தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டார்.
- கட்சியின் இலட்சியங்களில் ஒன்றான தீண்டாமை யொழிப்பு பிரச்சினையில் தீவிர அக்கறை காட்டி வருகிறார் இவர். இதனால் இவர் சந்தித்த எதிர்ப்புகள் ஏராளம்.

தமிழக தி. மு. கழகத்தில் என். வி. நடராசன் அவர்கள் அமைதியாக இருந்து, கழகத்துள் ஏற்படும் சிறு சிறு பூசல்களையும், தகராறுகளையும் தீர்த்து கழகத்தின் ஒருமைப்பாட்டை எப்படிக் கட்டிக்காத்து வருகிறாரோ அதுபோலவே தமிழரசுக் கட்சியிலும் அதே வேலையை செய்து வருபவர் நமது நடராசா என்று கூறினால் அது தவறன்று.

திரு. நடராசாவின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டும் வகையில் தமிழரசுக்கட்சி 1965ம் ஆண்டு அக்டோபரில், இவரை ஒரு மூதவை உறுப்பினராக்கி கௌரவித்தது. அன்று முதல் ஜே. பி. யூ. எம். ஆகவும் கடமை புரிவதுடன் மூதவையில் கட்சியின் கருத்துக்களையும், தமிழினத்தின் பிரச்சினைகளையும், தனது சொல்லாற்றல் கொண்டு தெளிவுபட எடுத்துரைத்து வருகிறார் இவர்!

1971ம் ஆண்டு ஆகஸ்ட் 4ந் திகதியுடன் தனது அறுபதாவது வயதை அடைந்த நடராசா அவர்கள், இப்போதும் விடுதலை உணர்வில் இளைஞராகவே காணப்படுகிறார். தன் மீதமுள்ள காலத்தையும், கட்சிக்காகவும், இனத்துக்காகவுமே அர்ப்பணிக்கப் போவதாக கூறுகிறார் நடராசா.

நடராசா போன்ற தன்னலமற்ற தொண்டர்கள் இருக்கும் போது தமிழரசுக்கட்சியை யார் தான் அசைத்துவிட முடியும்? தமிழினம் தனது உரிமைகளைப் பெறுவதை யார்

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தமிழரசுக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட திரு. சிரில் சேவியர் மார்ட்டின் தமிழரசுக்கட்சியினல் பெற்ற பா. உ. பதவியை விட்டு விலகியே தீர வேண்டுமென வாசகர் பலர் சுதந்திரனுக்கு எழுதியுள்ளனர். சென்றவாரம் சில கடிதங்களைப் பிரசுரித்திருந்தோம். இவ்வாரம் மேலும் சில கடிதங்கள் இடம் பெறுகின்றன.

—ஆசிரியர்.

# மக்கள் கருத்து வலுக்கிறது!

திரு. மார்ட்டின் அவர்கள் தமிழரசுக் கட்சியில் சேர்ந்ததை அறிந்த பொழுதும் அவர் போன தேர்தலில் வெற்றியீட்டிய பொழுதும் பேரானந்தங் கொண்டவர்களில் யானுமொருவன். தமிழ் மக்களுக்கு நல்ல காலம், வெற்றிக் காலம் வந்து விட்டதென்று எண்ணினேன். இப்போது மார்ட்டின் அவர்களின் செயலைக் கண்டு சொல்ல முடியாத அதிர்ச்சியடைந்துள்ளேன். இனிமேல் ஈழத் தமிழினத்தைக் காப்பதற்கு முன்னுள் அசுரர்களைக் கொன்று அமரர்சிறை மீட்ட முருகனின் வேலால்தான் முடியுமென்ற முடிவுக்கு வந்துள்ளேன். என்றாலும் முருகனின் கருணையைப் பெறுவதற்கு தமிழர்களும் தாங்கள் செய்யக் கூடியதெல்லாவற்றையும் செய்வதற்கு உறுதித்துக் கொண்டு பதவியில் தொடர்ந்திருப்பது எந்தக் கோழையும் எந்தத் துரோகியும் செய்யக் கூடிய செயல் இப்படியானவர்களை ஆதரிக்கும் ஒரு சமூகமும் வாழமாட்டாது.

இனிமேலாவது தமிழரசுக் கட்சியினர் தங்கள் அபேட்சகர்களைத் தெரியும் போது கட்சிக்காகவும் மக்களுக்காகவும் தரையில் உருள ஆயத்தமில்லாத பஞ்சணையில் உருளுகிறவர்களை, தமிழபிமானமில்லாதவர்களை, கட்சியில் சடுதியாய்புகுந்தவர்களை வெறும் வெற்றி வாய்ப்புக்காகத் தெரிவு செய்வதில் கவனமாயிருக்கவேண்டும்.

செ. நாகலிங்கம்,
தொண்டைமானாறு.

●

தயங்கிவரும் தமிழ்க் காங்கிரஸ் பொதுச்சபைக்கு தமிழரசுக்கட்சி பொதுச்சபை எடுத்த முடிவு ஒரு எடுத்துக் காட்டாக அமையட்டும்.!

—சிவ-மகாலிங்கம்,
தொழில் நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

●

சுதந்திரன் பத்திரிகை மூலமாக, யாழ்ப்பாணப் பா. உ. திரு. சி. எக்ஸ். மார்ட்டின் அவர்களுக்கு!

ஐயா, யாழ்ப்பாணத்து வாக்காளப்பெருமகன் என்ற முறையில் சிறியேனுகிய என் மனதில் உதித்த சில விஷயங்களை உங்கள் கவனத்திற்கு தருகிறேன்.

தமிழரசுக்கட்சியின் சார்பில் யாழ்நகர்த் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று இன்று கட்சியின் கட்டுப்பாட்டை மீறி கட்சியால் வெளியேற்றப்பட்டு இருகிறீர்களே அது உங்கள் மனதிற்கு நியாய மென்று படுகிறதா? அதிகம் படித்த நீங்கள்,-கடவுளுக்கு அடுத்தவர் நீதிபதி அந்த-பதவியை வகித்த நீங்கள் அநீதியாக நடக்கலாமா? அடுத்தவனுக்கு ஒரு நீதி தங்களுக்கு ஒரு நீதியா?

தான் அதில் சேர்ந்தேன் சென்ற தேர்தலில் என்னை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை; இம்முறை கட்டாயமாக அனுப்புவீர்களென எனக்கு நல்ல நம்பிக்கையுண்டு. சிலர் கூறுகிருர்கள் மார்ட்டின் தேர்தலில் வென்ருல் யாழ்ப்பாணத்திலும் இருக்கமாட்டார், கட்சியிலும் இருக்கமாட்டார் என்று; ஆனல் ஒன்று அவர்களுக்கு நான் கூறக்கடமைப் பட்டிருக்கிறேன்.

'எக்காரணத்தைக் கொண்டும் நான் யாழ்நகரை விட்டு போகமாட்டேன் என் மூதாதையர் எல்லோரும் யாழ்ப்பாணத்தவர்கள்தான், டேவிட் ரேட், மார்ட்டின் ரேட் எல்லாம் அவர்கள் பேரில்தான் வழங்குகிறது அதே போல் தந்தை செல்வநாயகம் தலைமையில் இயங்கும் தமிழரசுக் கட்சியிலிருந்தும் ஒருபோதும் விலகமாட்டேனென்றும் உறுதியாக கூறுகிறேன்' என்று முழங்கினீர்களே இன்று நடப்பது என்ன? சொன்னதெல்லாம் கடற்கரைக் காற்றுடன் கலந்து விட்டதா? வாக்குறுதியை மீறிய நீங்கள் பா. உ. பதவியை ராஜினுமா செய்து மீண்டும் தேர்தலுக்கு வருவீர்களா?

மனச்சாட்சிக்கு மதிப்பளித்து விட்டதாகாது. திரு. மார்ட்டின் இன்று அனுபவித்து கொண்டிருக்கும் நாடாளுமன்ற பதவி 'இலங்கை தமிழரசு' இயக்கத்தின் பெயரைச்சொல்லி பெற்ற ஒன்று. நிச்சயமாக அவர் மனச்சாட்சிக்கு மதிப்பளிப்பவராக இருந்தால், இந்த பிரதிநிதித்துவத்தையும் மனச்சாட்சியின் படி தூக்கியெறிந்து விட்டு கட்சி பெரிதல்ல என்ற தத்துவத்தின் துணையோடு சுயேட்சை வேட்பாளராக மீண்டும் யாழ் தொகுதியில் போட்டியிட முடியுமா? இதை செய்ய முன் வருவாரா? திரு. மார்ட்டினுக்கு உண்மையிலே மனச்சாட்சி உண்டா?

—கே. கமலபதி,
அக்கரப்பத்தனை.

●

மார்ட்டின் அவர்கள், அறிந்துகொள்ளக்கூடியதாவது:- மதத்திலும், கல்விகளிலும், சமூக கோட்பாடுகளிலும் அரசியல் கட்சிகளிலும் நீதி பரிபாலனங்களிலும், உலகில் ஒரு வரையறுக்கப்பட்ட கட்டுப்பாட்டு விதிகளமைந்துள்ளன. அதன்படி நடப்பவர்கள் தான் மனச்சாட்சியுடையவர்கள். இதைக்கரு

# மார்ட்டின் பதவியிலிருந்து வெளியேறத்தான் வேண்டும்!

பூண்டவர்களாய் செயலாற்ற வேண்டும்.

தமிழர்களில் அரசியல் ஆசை கொண்ட அனேகர் தமிழரசுக்கட்சியில் சேர்வதும், கட்சியின் உதவி கொண்டு வெற்றியீட்டுவதும் பின்னர் போலிச்சாட்டுகள் சொல்லிக் கட்சியை உதைத்துத் தள்ளிவிட்டு தங்கள் விருப்பம் போல் செய்வதும் சர்வசாதாரணமாகிவிட்டது. இப்படியான செய்கைகளால் இவர்கள் தமிழர்களின் அழிவுக்கு வழி தேடுவதோடு உலக அரங்கிலும் தமிழினத்துக்கு எவ்வளவு அவமானத்தையும் தேடிக் கொடுக்கிருர்களென்பதையும் இவர்களால் உணர முடியாதா? தமிழினம் அவ்வளவு கீழ் நிலைக்குப் போய் விட்டதா?

'மயிர் நீப்பின் வாழாக்
கவரிமா அன்னர்
உயிர் நீப்பர் மானம்வரின்'

என்று மானத்துக்கு இலக்கணம் வகுத்த தமிழினத்துக்கு இன்று மானம் என்ருல் என்ன வென்று தெரியாமல் போய்விட்டதா?

ஒரு கட்சியில் சேர்பவர்கள் கட்சிக்கு முதலிடங் கொடுத்துத் தங்களுக்கு இரண்டாமிடந்தான் கொடுக்க வேண்டுமென்பது கட்சியில் சேர்பவர்களுக்குத் தெரியாதா? அப்படியில்லாமல் கட்சி ஏதோ பெருந் தவறைச்செய்கிறது. அதனல் கட்சியை அனுப்பியமக்களுக்குப் பெரும் அழிவு அல்லது ஆபத்து ஏற்படப் போகிறதென்று அவர்களின் மனச்சாட்சி சொன்னல் உடனே தங்கள் பதவியை இராஜிநாமாச் செய்து மக்கள் மன்றத்துக்குச் சென்று தங்கள் மனச்சாட்சி சரிதானென்பதை நிரூபிக்க வேண்டும். இதுவே ஜனநாயக முறை. இதுவே நேர்மையாளர் பண்பாளர் செய்ய வேண்டிய செயல்.

இதை விட்டு மனச்சாட்சி என்ற போர்வையில் ஒழித்

தமிழனின் மறுமலர்ச்சியான வாழ்விற்காக ஆரம்ப காலம் தொட்டு துயரங்கள், துன்பங்கள் எல்லாவற்றையும் தாங்கி உண்மையான விடுதலை இயக்கமாக பரிணமித்துக் கொண்டிருக்கும் நமது தமிழரசுக் கட்சியில் களைகள் கோரைப் புல்லினங்கள் உடனே களைந்து எறியப்பட்டுவிடும் என்பதற்கு மார்ட்டினின் விவகாரம் நல்ல எடுத்துக் காட்டாகும்.

யாராக இருந்தாலும் கட்சியின் கட்டுப்பாட்டை மீறியவர்கள் கட்சியிலிருந்து விலக்கப்பட வேண்டியவர்களே! தமிழரசுக் கட்சி தன் இயக்கத்தை வளர்த்து வந்த பாதையில் வளர்ந்த தொண்டர்கள், வளர்த்த தலைவர்களுக்கு அதன் இலட்சியம் தெரியும்.

திருமலை நடராசன், கோமான் வன்னியசிங்கம், அமரர் ஏகாம்பரம் போன்ருேரின் வாழ்வை அறிந்தவர்களுக்கு இதன் புனிதம் புரியும். பொதுச் சபையில் இருப்பவர்கள் எல்லோரும் காந்திய வாதிகள். நேர்மையின் சிகரங்கள். தந்தைசெல்வாவின் தூய அப்பழுக்கற்ற அரசியல் நெறியில் வந்தவர்கள். படிப்படியாக பல லட்சக்கணக்கான தொண்டர்களாலும், அவர்களின் வியர்வையாலும் கண்ணீராலும் கட்டி எழுப்பப்பட்ட விடுதலை இயக்கத்தில் ஒற்றுமைமை உடைக்க வரும் யாரையும் சும்மா விடமாட்டார்கள்.

கட்சியின் கட்டுப்பாட்டை மீறி நடந்த சிவசுந்தரம், நவரத்தினத்தின் கதிதான் மார்ட்டினுக்கும் நடக்கப் போகிறது. கட்சியின் நீதிக் கொடி தந்தை செல்வாவின் கையில் ஓங்கிப் பறக்கிறது.

பல மாதகாலமாக கட்சியின் கட்டுப்பாட்டை மீறிச் செயல்பட்டு வரும் தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கத்

கட்சியை விட்டு விலகிய பின் அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்திற்கு நீங்கள் சமுகமளித்திருந்தால் மக்களிடம் ஓரளவு ஆதரவு பெற்றிருக்கலாம். ஏனெனில் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் கூட்டத்திற்கு போகாமல் இருந்தபோது நீங்கள் அங்கு போய் தமிழரசுக்கட்சி பா. உ. மார்ட்டின் கூட்டத்தில் கலந்து கொண்டார் என்ற அவப் பெயரை கட்சிக்கு ஏற்படுத்து விட்டீர்களே.

மற்றக் கட்சிகளைப் போன்றது அல்ல தமிழரசுக் கட்சி. மக்கள் இரத்தத்தால், தியாகத்தால், ஏகாம்பரம், கந்தையா, வன்னியசிங்கம், இராசவரோதயம் போன்ற பெரியவர்களின் உயிரால் கட்டி எழுப்பப்பட்ட கட்சி. இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடும் ஒரேயொரு கட்சி, ஒவ்வொரு தமிழனின் கடைசி மூச்சு இருக்கும் வரைக்கும் தன் மானத்தை அடகுவைக்க விடாமல் தடுக்கும் கட்சி இந்த தூய தமிழரசுக்கட்சி. அதற்கு இப்படியாக அவப் பெயரை வாங்கித் தந்து விட்டீர்களே. ஏன் ஐயா?

மாற்றுக் கட்சிகள் சேறு: அவற்றின் நடுவே செந்தாமரையாக எமது கட்சி காட்சி தருவது உங்களுக்குப் பொறுக்கவில்லையா. பாராளுமன்றத்தில் முட்களின் நடுவே பன்னிருவர் முல்லை ரோஜாக்களாக தமிழ் மணம் கமழ்கிருர்களே இது கூடவா உங்களுக்குப் பொறுக்கவில்லை. யாழ்நகரில் நடைபெற்ற கூட்டங்களிலெல்லாம் நீங்கள் என்ன கூறினீர்கள்.

'பெருமக்களே, நான் பல வருடங்களாக ஒரு கட்சியிலும் சேராமலிருந்து யோசித்தேன் எந்தக் கட்சி தமிழருக்கு அதிக நன்மை செய்யக் கூடியது என்று ஈற்றில் தமிழரசுக்கட்சிதான் தமிழர்களின் உரிமைக்காகப் போராடும் ஒரேயொரு கட்சியென உணர்ந்தேன். ஆகவே

—நல்லை-ஆனந்தன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

●

ஐயா மார்டின் அவர்களே!

தமிழர் நலனைக் காக்கும் ஏகபோக உரிமை தமிழரசுக் கட்சிக்கு இல்லை எனத் தாங்கள் கொடுத்திருக்கும் விளக்கம் தவருனதொன்ருகும். நீங்கள் கூறுவதைப் பார்த்தால், நீங்களும் இந்தக் கட்சியில் சேர்ந்து இயங்கினுல்தான் —இப்படிப்பட்ட ஒரு சாதனையை சாதிக்கமுடியுமெனக் கூறுகிறீர்கள்போலத் தெரிகிறது.

வைர நெஞ்சம் படைத்தோன் எதற்கும் அஞ்சமாட்

## மக்கள் குரல்

டான் என்பது தாங்களுக்கு தெரியுமென நினைக்கிறேன். இருந்தும் ஒருமுறை ஞாபகப் படுத்துகிறேன். எங்கள் தந்தை செல்வநாயகம், வயதில் முதிர்ந்தவர் ஆனல் தமிழ் உரிமைகோரி குரல் எழுப்பத் தயங்காதவர்; உம்மைப்போன்ற ஒரு சுயநலப் பிரியரல்ல இவர். இப்படிப்பட்ட ஒருவர் இயக்கிவந்த இக்கட்சியிலிருந்து நீர் விலகியதும் பல புழுகுமூட்டை முடிச்சுகளை அவிழ்த்துவிட்டு தமிழரின் உரிமையைக் கோரி சுயேச்சையாக இயங்கப்போவதாகக் கூறிக்கொள்கிறீர், இது தமிழ்மக்களாகிய எங்களுக்கே அவமானம்.

—சபாரெத்தினம் தயா
உப்புவெளி
திருகோணமலை.

●

எடுத்ததற்கெல்லாம் மனச்சாட்சி என்று பத்திரிகைகளுக்கு அறிக்கை மேல் அறிக்கை விட்டுக்கொண்டிருந்தால் மாத்திரம் அது

தாமல் மனித சுதந்திரத்தையும் பேச்சுரிமைகளையும் கட்டுப்பாடற்ற போக்கில்செலுத்துவது அறிவுடைமையல்ல.

தமிழரசு கட்சியின் கோட்பாடுகளில் குறையிருப்பதாக தாங்கள் கருதினல் பொதுச் சபையை கூட்டி ஒரு விளக்கம் கொடுக்க நீங்கள் கடமைப்பட்டுள்ளீர்கள். கட்சி கட்டுப்பாட்டை மீறி அ. நி. சபையில் பிரவேசித்துவிட்டு உங்கள் கொள்கைக்கு சப்பைக் கட்டு கட்டுவதற்கு சிங்களவர்களை வால் பிடிப்பது தமிழினத்தையே காட்டிக்கொடுக்கும்காரியம்.


சுதந்திரக்கட்சி, திரு. ஆர். ஜி. சேனநாயகாவை கட்சியைவிட்டு விலக்கியது எதற்காக? என்று யோசிக்க வேண்டும். உங்களை அரசியலிலிருந்து ஓட்டி விடுவதற்கு சிங்கள பா. உ. க்களின் நகைச்சுவையான ஆர்ப்பாட்டங்கள் ஒன்றே போதும். நீங்கள் உங்களை இப்போது ''அரசியல் கோமாளி', யாக்கிக்கொண்டீர்கள்.

திரு. செல்வநாயகம் அவர்களை குறைகூற நீங்கள் முற்றிலும் அருகதையற்றவர். அவர் தமிழினத்திற்கு செய்யக்கூடிய நன்மைகளை செய்து கொண்டிருக்கிருர். வெற்றி, தோல்விகள் இருக்கின்றன. உலகில் எந்த அரசியல் கட்சிகளிலும் குறைகள் உண்டு.

நாங்கள், தமிழரசு கட்சியினர் அல்ல. ஆனல் தமிழர்களுக்கு தமிழரசு பெரிய நன்மை செய்யமுடியா விட்டாலும் தமிழர்களுக்கு ஏற்படக்கூடிய கெடுதியையாவது தமிழரசு தடுத்து வருவதை நாங்கள் அறிந்துள்ளோம்.

—கே. மெய்யப்பன், செயலாளர்,
இந்தியா, இலங்கை நட்புறவு
சங்கம், நூரளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீக்குள் விரலை வைத்தால்...!

நமது தொடர்கதை

## அத்தியாயம் (8)

இன்பமும் துன்பமும் சுழலும் சக்கரம் போன்றவையாயிருந்தாலும் துன்பத்துக்கு மேல் துன்பமும், இன்பத்துக்கு மேல் இன்பமும் தான் தொடர்ந்து வருவதைப் பெரும்பாலும் வாழ்ந்து அறிந்தவர்கள்' உணர்வார்கள். 'பட்ட காலிலேபடும் கெட்ட குடியே கெடும்' என்ற பழமொழி கூட வாழ்ந்து அனுபவப்பட்டவர்களின் பொன்மொழிதானே.

சிவராமன் ஒரு நாளுமில்லாதவாறு பதைத்து ஓடிவந்ததும் பாரதி பயந்து விட்டாள்.

'என்னடா சிவா? ஏன் ஓடி வந்தாய்?' என்றாள் 'அக்கா ரகு அண்ணனைத் தேடி யாரோ வந்திருக்கிறார்கள்' என்று வெளியே — சுட்டிக் காட்டினான்.

இதற்கிடையில் ரகுவே வந்து விஷயத்தை அறிந்ததும் வெளியே ஓடினான். வெளியில் ஒரு பெரியபென்ஸ் கார் நின்றிருந்தது.

'மிஸ்டர் ரகு, குட்ஈவினிங்: கம்கியர்' என்று ரோஸி அழைத்தாள்.

'ஹலோ! என்ன விசேடம்?'

'மிஸ்டர் ரகு, பொஸ் உங்களை அவசியம் சந்திக்க விரும்புகின்றார்.'

'உடையை மாற்றிக் கொண்டு வருகிறேன் ரோஸி.'

'பரவாயில்லை. இதுவே போதும். ஏறுங்கள் காரில் அவசரமும் கூடத்தான். கமோன்.' என்று கதவைத் திறந்து விட்டாள்.

இருபத்தைந்து நிமிடங்களின் பின்பு பலாலியிலுள்ள ஒரு வளவினுள் கார் நுழைந்தது. அந்த வளவு பெரிய தோப்பாகக் காணப்பட்டது தென்னை மரங்களும் மாமரங்களுமாக நிறைந்து காணப்பட்ட அந்த வளவின் மத்தியில் பழங்காலத்து டச்சுக்காரரின் கோட்டை போன்று ஒரு மாளிகை தென்பட்டது. கார் நின்றதும் ரகுவுடன் கூடவே ரோஸியும் இறங்கினாள். வாசலில் நின்ற பணியாள் 'சல்யூட்' அடித்து வணங்கிக் கதவைத் திறந்து விட்டான்.

வெளிப் பார்வைக்குப் பழைய கட்டிடம் போலத் தோன்றினாலும் உள்ளே நவ நாகரீகமாக விளங்கியது அந்த பங்களா. எங்கும் சிவப்பு நிறத்தில் தரை விரிப்புகள். கடும் நீல நிறத்தில் கதவு, யன்னல் சேலைகள் தொங்கிக் கொண்டிருந்தன. ரோஸி ஒரு அறையின் முன் நின்று அழைப்பு மணியை அழுத்தினாள்.

'ஜேஸ், கம் இன்.' என்றது ஒரு கனத்த குரல்.

கதவை திறந்துகொண்டு இருவரும் உள்ளே சென்றனர் அன்றுதான் ரகுராமன் முதன்முதலாக அந்த மனிதனைப் பார்க்கின்றான்.

'குட் ஈவினிங் மிஸ்டர் ரகுராமன்' என்றார் அந்த மனிதன்.

'குட் ஈவினிங் பொஸ்.'

'நல்லது. மூன்று மாதங்கள் எமது கம்பனியில் வேலை செய்து எங்கள் நம்பிக்கைக்கு உரியவரான காரணத்தினால் உம்மை நேரில் சந்திக்க விரும்பினேன். யூ ஆர் காண்ட்சம் அன்ட் இன்டலிஜன்.'

'தாங்கியூ பொஸ்'

'மிஸ்டர் ரகு, அனேகமாக நான் எனது கம்பனி ஊழியர்களைச் சந்திப்பதில்லை. மிகவும் நம்பிக்கையானவர்களை மட்டுமே இங்கு அழைத்துப் பேசுவேன். உம்மைப் பற்றி மனேஜரும், ரோஸியும் மிகவும் பாராட்டியுள்ளனர். கொழும்பில் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையை விரைவாகவும் 'சிக்கல் ஏதும் இன்றி நிறைவேற்றியதற்காகவும் பாராட்டுகின்றேன்.'

யாழ். ஜனர்த்தனன்

'தாங்கியூ பொஸ்.'

'உமக்கு அடுத்த மாதம் முதல் ஐந்நூறு ரூபாய் சம்பளம் கொடுக்க உத்தரவிட்டுள்ளேன்.'

'உண்மையாகவா? நம்ப முடியவில்லையே.'

'மிஸ்டர் ரகு, என்னைப் பொறுத்தளவில் நம்பக் கூடிய மனிதனுக்கு ஐந்நூறு அல்ல ஐயாயிரம் கொடுக்கவும் தயங்கமாட்டேன்.'

'உண்மையில் நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.'

'நல்லது மிஸ்டர் ரகு. நாளைக்கு நீர் ஆபீசிற்குப் போக வேண்டாம். நான் தரும் பார்சலை ஒருவரிடம் சேர்த்து விட்டு, ரசீது பெற்றுக்கொண்டு வரவேண்டும். பார்சல் சிறியது. ஆனால் இதன் மதிப்பு லட்சத்துக்கு மேலிருக்கும். நீர்தான் இனி இதற்குப் பொறுப்பாளி. மிகுதி விடயங்களையும் விலாசத்தையும் ரோஸியிடம் பெற்றுக் கொள்ளலாம்.'

'ஜேஸ் பொஸ்.'

'சரி நீர் போகலாம்.'

இருவரும் வெளியே வந்தனர். அந்தப் பார்சலில் என்ன இருக்கும் என்று அறிய ஆவல்பட்டான் ரகுராமன். ஆனால் ரோஸி அவனையும் கூட்டிக்கொண்டு இன்னொரு அறையில் நுழைந்தாள். அந்த அறை அவளுடைய காரியாலய அறை போலும். தன்னைப் போலவே அறையையும் சுத்தமாக வைத்திருந்தாள் ரோஸி.

'என்ன ரகு? மிகவும் அதிர்ச்சியடைந்தவர் போல் காணப்படுகின்றீர்களே?' என்றாள் ரோஸி.

'நியலி. என் வாழ்க்கையில் இப்படியொரு திடீர் சம்பவம் ஏற்படுமென்று நான் நினைக்கவில்லை ரோஸி. இதற்காக உனக்குத்தான் நான் நன்றி கூறவேண்டும்.'

'தவறு ரகு: அப்துல்லா மிகவும் நல்லவர். அவர் என்று ஒருவரிடம் நம்பிக்கை வைக்கின்றாரோ, அவன் எந்த இனத்தவனாயினும் அவனிடம் எந்த ஒரு பெரும் பொறுப்பையும் ஒப்படைப்பார். எங்கள் மனேஜர் கூட இருநூறு ரூபா சம்பளத்தில் அமர்த்தப்பட்டே இன்று 'ரூ தௌசன்ட்' சம்பளம் பெறுகின்றார்.'

'என்ன இருந்தாலும் அப்துல்லா ஒரு பெரிய மனிதன் நியலி கீ இஸ் ஏ கிறேற் மான்.'

இவர்களுடைய சம்பாஷணையை அறையிலிருந்து கேட்டவாறே அப்துல்லா சிரித்துக்கொண்டிருந்தார்.

ரகுராமன் ஒரு மர்ம மனிதனைப் போலவே பானுமதிக்குத் தோற்றமளித்தான். ஒரு சமயம் அவனை விடக் கேவலமான மனிதன் இந்த உலகிலேயே கிடையாது எனும்படி நடந்து கொள்கிறான். மறு சமயம் மிகமிக உயர்ந்த மனிதனாகக் காட்சியளிக்கின்றான். சில வேளைகளில் ஏதுமறியாத குழந்தை போலத் தோற்றமளிக்கின்றான். அவனைப்பற்றித் திட்டவட்டமான எந்த ஒரு முடிவும் கொள்ள முடியாத விசித்திரப் பிறவியாகவே விளங்கினான். பானுமதியின் சிந்தனையின் ஒவ்வொரு நகர்விலும் ரகு நின்றுகொண்டிருந்தான்.

அவன் சிரிக்கும் போது அந்தச் சிரிப்பில் கள்ளமில்லை கபடமில்லை, சூதுவாது ஏதும் அறியாத பச்சைப் பிள்ளை போலச் சிரிக்கிறான். அதில் தான் எத்தனை கவர்ச்சி. அவன் பேசுவது குறைவு. அப்படிப் பேசினாலும் அது குழந்தையின் மழலைபோல் பொருள் விளங்காத, ஆனால் ஆழ்ந்த கருத்துள்ளவையாகத் தானிருக்கும். எதையும் அலட்சிய நோக்குடன், ஆனால் கூர்ந்து கவனிக்கும் அந்த விழிகளைப் பார்க்கும் பொழுது மீண்டும் பார்க்கத் தோன்றும் ஒருவித மாரீசக் கவர்ச்சி. அவனைப் பார்த்தால் யாருமே சலனமடையாது இருக்கமுடியாது போலிருக்கே! என்று வியந்தவளாக நின்றுகொண்டிருந்த பானுவின் செவிகளில், 'உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல— உன்னை எண்ணாத நெஞ்சும் நெஞ்சல்ல' என்ற சினிமாப் பாடல் தேனினுமினிய குரலில் வானொலியிலிருந்து மிதந்து கொண்டிருந்தது.

சந்தர்ப்பத்துக்கேற்ப நல்ல பாடல்களை ஒலி பரப்புவதில் இலங்கை ஒலிபரப்பு நிலையம் பெயர் பெற்றது. தென் கிழக்காசியாவிலேயே சினிமாப் பாடல்கள் ஒலி பரப்புவதற்குப் பெயர் பெற்ற வானொலி. பெரும் பாலும் [illegible] ன்னியர்களின் [illegible] அளித்து வருகின்றது என [illegible] வானொலி கேட்க அதிகம் பிரியப்படாதவளான பானுவின் இதயத்தையே ஈர்த்து இழுத்துவிட்டது அப்பாடல். அவளது இதய மலரை ரீங்காரமிடும் வண்டாக அப்பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது.

வெளியே சென்ற ரகுராமன் ஒன்பது மணிக்கு மேலாகியும் திரும்பி வரவில்லை. அவனை அதற்கு மேல் எதிர்பார்த்திருப்பதும் சரியல்ல என்று எண்ணியவளாகப் படுக்கைக்குச் சென்றுவிட்டாள். அவள் மனதில் வேறு நினைவுகள் எல்லாம் எங்கோ ஓடி ஒழித்துக்கொண்டன.

அந்தப் பெண் ரோஸியுடன் ரகு எங்கே போனான்? சினிமாவுக்குப் போயிருப்பானா? அவளிடம் ரகு எங்கே மனதைப் பறிகொடுத்திருப்பானா? அவள் அப்படியொன்றும் பிரமாதமான அழகியில்லையே! சதைபிடிப்பான உடலும், குள்ள வாத்துமாதிரி குட்டை உருவமும், செயற்கை அழகாலேயே தன்னை ஒரு அழகியெனப் பாவனை செய்து கொள்ளும் அவளிடம் ரகு தன்னை இழந்திருப்பானா! அப்படி இழந்தால் தான் எனக்கென்ன? என் மனம் ஏன் இப்படி வீணாக அவரைப் பற்றியே எண்ணி வலம் வருகின்றது! என்று எண்ணியவளாகப் புரண்டு படுத்தாள். அந்த வேளையில் வெளியே கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. திடீரென எழுந்து யன்னல் அருகே சென்று பார்த்தாள்.

கையில் ஒரு சிறு பார்சலுடன் ரகு சென்றுகொண்டிருந்தான். அவனை இறக்கி விட்டுச் சென்ற காரில் ரோஸி இருப்பது நன்கு தெரிந்தது. அந்த உடையுடன் அவன் சினிமாவுக்குச் சென்றிருக்க முடியாது. 'அப்படியானால் அவன் எங்கே சென்றிருப்பான்? எங்கே போனால்தான் எனக்கென்ன? என்று மனதைச் சமாதானம் செய்தாலும் தன் மனம் ஏன் அப்படி அலட்டிக் கொள்கின்றது என்று எண்ணியபடி மீண்டும் கட்டிலில் வந்து விழுந்தாள் பானுமதி.

நீல வானில் தங்கத்தகடு மிதப்பது போல வெண்ணிலவுப் பெண்ணரசி பவனி வந்துகொண்டிருந்தாள். பனியில் குளித்தவை போன்று கடற்கரைத் தென்னைகள் எல்லாம் பளபளத்து நின்றன. நிலவைப் பிடித்து விளையாட விரும்புபவை போன்று கடல் அலைகள் எழும்பிக் குதித்து சலித்துச் சிதறிக் கொண்டு கரையை அளைந்தன.

ஒரு கல்லில் கெண்டைக் கால் வரை தண்ணீரில் தாளமிட அமர்ந்திருந்தாள் பானுமதி. அவளுடைய கையில் ஒரு கூடை நிறைய மல்லிகையும், சம்பங்கியும் மணம் கமழ்ந்து கொண்டிருந்தது. அவள் ஏதோ சிந்தனையிலாழ்ந்து இருந்தாள். அவளையறியாமல் அவளுக்குப் பின்புறமாக யாரோ வந்து அவள் விழிகளைப் பொத்துகின்றனர். ''யாரது? என்று திரும்புகின்றாள். அவளுடைய கையிலிருந்த கூடை கவிழ்ந்து விடுகின்றது. துடித்து எழுந்த பானுவின் கரங்களைப் பற்றியவாறே ரகு சிரித்துக்கொண்டு நிற்கிறான்.

'நீங்களா ரகு?' என்று நாணிச் சிரிக்கின்றாள்.

'நான் தான். அடடே மலர்கள் சிந்துப்பட்டு விட்டனவே. அவை ஆண்டவனுக்கு அர்ப்பணமாக வேண்டிய மலர்களல்லவா?'

எனக்குக் கடவுள் நீங்கள் தான் என்று அவள் கூறிக்கொண்டு அவன் மார்பின் மீது சாய்கின்றாள். அவள் உள்ளத்துள் பெண்மையின் மென்மை உணர்வுகள் கிளர்ந்து எழுந்து மோதுகின்றன. தன்னையே தான் மறக்க வைக்கும் அந்த உணர்வுக் கிறக்கத்தில் அவள் விழிகளை மூடிக்கிடக்கின்றாள். சில விநாடிகளின் பின்பு விழிகளைத் திறந்து பார்த்தபோது அவளை அணைத்தபடி யாரோ ஒரு அந்நியன் நிற்கிறான். தணலிடைப்பட்ட புழுப் போலத் துடித்துக் கதறிய பானுமதி, 'ரகு ரகு' என்று கத்துகிறாள். அதே வேளையில் தூரத்தே எங்கோ ஆலயமணி ஒலிக்கும் ஓசை கேட்கின்றது. விழிகளைத் திறந்த பானு, தான் கண்டது கனவு என உணருகின்றாள். அவள் உடல் வியர்த்து நடுங்கிக் கொண்டிருக்கிறது. "என்ன பயங்கரம்? கட

(11ம் பக்கம் பார்க்க)

## சாய்க சாதி

காவலூர் சிவன்

ஆதி ஆதிகாலமாக
ஆண்டுவந்த எம்மினம்
மோதி மோதிச் சண்டையிட்டு
முடியிழந்து சாய்ந்தது
சாதி சாதி யென்று சாற்றி
சால்பு கேட்டு நின்றதால்
பாதி பாதியாக எங்கள்
பான்மை கெட்டுப்போனதே!

சாதியென்று சமயமென்று
சண்டை நித்தம் செய்துமே
வீதிக் கொரு காட்சியாக
வீணில் நின்று புலம்பினோம்!
வாதுமட்டும் செய்தலன்றி
வலிமை வேறுஇன்மையால்
நாதியற்றுப் போனதன்றி
நன்மை வேறு வந்ததோ?

சிற்றின மெனவே நாட்டில்
சீரழியும் ஓரினம்
உற்றநம்முடன் பிறப்பை
உழலுமா றொதுக்கியே
மற்றின மெமை வதைத்தல்
மா கொடி தெனறலறிடும்
உற்பவம் இதை நினைத்து
உலகமே சிரிக்குதே?

வள்ளுவன் எமதினத்தில்
வந்து தோன்றி வாழ்ந்ததாய்
வெள்ளமாக வெறு மொழியில்
வெட்டி வீழ்த்தி மேடையில்
துள்ளுறீரே சாதி பேதம்
தொலையுமோ வாய்வீச்சிலே?
கிள்ளியதனைக் களையவே
கிளர்ந்தெழு தமிழனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மன்னர்களின் காலத்திலும் நீதிமொழியாக இருந்தது தமிழே!



நாங்கள் இந்த நாட்டில் இருக்கத்தான் போகிறோம். தமிழ் மொழி பல்வேறு காலங்களில் இந்நாட்டில் மிக உயர்ந்த நிலையில் இருந்திருக்கின்றது. சிங்கள மன்னர்கள் காலத்திற்கூட அது மிக உயர்ந்த நிலையில் இருந்திருக்கின்றது. இதைக் கோட்டேப் பிரதிநிதியாகிய நீங்கள் அறிவீர்கள் அக்கிராசனர் அவர்களே.

கோட்டே காலத்தில் இருந்த சிங்களப் புலவன் அழகியவண்ண தமிழின் சிறப்பைப் பற்றி என்ன சொன்னான் என்பதையும் சிங்களத்தை எவ்வாறு தாழ்த்திச் சொல்லி இருக்கின்றான் என்பதையும் நாம் அறிவோம். அதை நான் மீண்டும் இங்கு எடுத்துரைக்கத் தேவையில்லை. ஒரு உயர்ந்த பண்பாடுள்ள மொழியாகக் கருதப்பட்டது அன்று தமிழ் மொழி.

கோட்டே மன்னர்கள் தமிழில் கைச்சாத்திடவும் தயங்கவில்லை. கோட்டே புலவன் அழகியவண்ண தமிழ் மகத சத்தே, அதாவது தமிழ் பாளி சமஸ்கிருதத்தை மிக உயர்ந்த அந்தஸ்தில் வைத்து வர்ணித்துள்ளான். இப்பொழுது இருப்பதைப் போல சிங்கள மன்னர்கள் தமிழுக்குரிய இடத்தைக் கொடுக்கப் பயப்படவில்லை. சிங்கள மன்னர்கள் தமிழ் மக்களைத் தமிழ் மொழியில் ஆட்சி செய்து வந்திருக்கிறார்கள் என்பதற்குச் சான்றுகள் உண்டு.

இங்கே மொழிப் பிரச்சினையும் கோரிட்டு மொழிப் பிரச்சினையும் வருகிற காரணத்தினாலே, பல சான்றுகள் இருப்பினும் ஒரு சான்றை மாத்திரம் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ் மக்கள் ஆளப்படுகிற விதத்தை, தமிழ் மக்களை தமிழிலே ஆண்டார்கள், அதைத் தமிழிலே எழுதிவைத்தார்கள் என்பதை உங்களுக்கு எடுத்துக்காட்ட கற்சாசனங்களிலிருந்து ஒரேயொரு குறிப்பை—சான்றை மாத்திரம் இங்கே வாசித்துக் காட்ட விரும்புகிறேன். *EPIGRAPHIA ZEYLANICA, Volume III, Part 6*—302 ஆம் பக்கத்தில்—புதுமுத்தாவை என்னும் இடத்திலே இருக்கிற இரண்டு தமிழ் கல்வெட்டுக்கள் பற்றிச் சொல்லப்படுகின்றது. புதுமுத்தாவை என்பது எனது இடது பக்கத்தில் அமர்ந்திருக்கும் கௌரவ நிக்கவரெட்டியப் பிரதிநிதியுடைய ஊராகிய நிக்கவரெட்டியாவுக்கு இரண்டு மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது. அதில் ஒன்றை மாத்திரம் நான் இங்கே வாசித்துக் காட்ட விரும்புகிறேன். அங்கேயுள்ள பிரச்சினையை எடுத்து அலசுவதற்காக அல்ல.

அங்கே ஒரு சாதிச் சண்டை நடந்தது. அங்கேயுள்ள சலவைத் தொழிலாளர்களுக்கும் பஞ்சகம்மாளர்களுக்கும் ஒரு சாதிச் சண்டை நடந்தது. அப்பொழுது அங்கே வாழ்ந்த தமிழர்கள் மத்தியிலே இருந்த சாதிப் பிரச்சினையை விசாரித்துத் தீர்த்து தமிழிலே எழுதி வைத்திருக்கிறார்கள். நான் அதை வாசித்துக் காட்ட விரும்புகிறேன். 12 ஆம் நூற்றாண்டிலே, ஏறத்தாழ 1122ஆம் ஆண்டு வரையிலே எழுதப்பட்ட கல் சாசனமாகும் இது.

''சுவஸ்தி சிறி அபய சால மேக சக்கரவர்த்திக்கு ஜயபாகு தேவர்க்கு ஆண்டு எட்டாவது பங்

## புதுமுத்தாவை தமிழ் கல்வெட்டு எடுத்துக்கூறும் வரலாற்றுண்மை பாரீர்!

குனி முன் நாலாம் பக்கம் சிறி வீரவாகு தேவர் பிரதானிகள் பூர்வ ஆசாரம் விசாரணை பண்ணி கம்மாளர்க்கு கொட்டகல்லும் பாவாடையும் முகத்திடும் ஏறுகைக் காரணம் ஆகக் கண்டு வண்ணாரை இது எழுதுவித்தமையால் எங்கள் நாயனார் சிறி வீரவாகு தேவர்க்கு ஆக அளவு சாதக பெய்யகல்லு வெட்டுவித்தோன். மகாலிங்கம், கனவடியன், ராமன் பூரவிபைத கணவாளன் செய்வித்த கம்மாளர் பூவேசி

## அ. நி. சபையில் துரைரத்தினம் முழக்கம்!

காகும் பண்டாரத்துள் காலக்குழிக்கும் குமரசேன நம்பாணனை விஜயாபரணன் என்பவனை இட்டு......''

இதன் ஆங்கில மொழி பெயர்ப்பையும் இப்பொழுது வாசிக்கின்றேன்.

''Hail! Prosperity! On the Fourth day of the first half of the month of Panguni, in the eight year of the Emperor Abaiya Salamega Sri Jayabahu—devar.

Whereas the 'five chiefs' of Sri Virabahu-devar, having inquired into former custom and having seen reason for the blacksmiths to receive *kottacalu*, foot clothes and clothes for covering the faces of the dead, sent for the washerman, and made them perform (the said services), our Loard Sri Virabahu-devar......writing....

has been pleased to vouchsafe that this may last till the end of the aeon, I, Mahalingam Kanavadi caused this stone to be engraved.

Damaran Boruvesi Paytangi Kallanavan having caused (this) to be executed, Damaran Bhoruvesi Kacampadarattul and I, Kalaccukkuli Kummaracena Nambanan alias Vijayabaranan (attest this writing). This is my writing.

இப்படித் தமிழிலே எழுதியிருக்கிறார்கள் சிங்கள மன்னர்கள். சிங்கள மன்னர்களுடைய காலத்திலே தமிழர்களை தமிழிலே ஆண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே நான் இதனைச் சொல்கிறேன்.

ஆதலால் சிங்கள மன்னர்கள் செய்ததைத்தான் உங்களையும் செய்யும்படி கேட்கின்றோம். புதிதாக எதையும் செய்யச் சொல்லிக் கேட்கவில்லை. கோட்டை இராச்சியத்திலும் அதே நிலைதான் இருந்தது. ஒல்லாந்தர் காலத்திலும் அப்படித்தான் இருந்தது. ஆங்கிலேயர் வந்த பின்தான்—கோல்புறூக் வந்ததன்பின்தான்—நிர்வாகம் பிரிந்து எட்டப் போய்விட்டது.

நான் முன்னரே கூறியது போல, யாழ்ப்பாணத்தை 1619வரை தமிழ் மன்னர்கள் ஆண்டார்கள். அந்நியர் வந்து எங்களையும் அடிமைப் படுத்தினார்கள்; உங்களையும் அடிமைப்படுத்தினார்கள். ஆதலால் நாம் இன்று சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். சிந்தித்துச் செயலாற்றா விட்டால் வருங்காலம் என்னவாகுமோ எனக்குத் தெரியாது.

---

## இயக்க ஏடுகளும் இயக்க நண்பர்களின் கடமையும்!

''விற்பனை அளவில் இயக்க சார்புடைய ஏடுகள் குறைவாக இருந்தாலும் பளபளப்பும் பகட்டும் இல்லாமலிருந்தாலும்—கொள்கையிலுள்ள உறுதிப்பாட்டினையும் இலட்சியத்தில் நமக்குள்ள தெளிவான மனப்போக்கினையும் நாட்டு மக்களுக்கு நம் ஏடுகள் மூலம் நாம் அறிமுகப்படுத்தியிருக்கிறோம்.

ஏடுகள் என்பவை நல்ல எண்ணங்களை உருவாக்கக் கூடியவைகளாக இருக்கவேண்டும்.

இலட்சக்கணக்கில் ஓடுகின்ற ஏடுகளில் தங்களுக்கு தேவையானதைப் படித்து முடித்து விட்ட பின் தூர வீசிவிடுகின்றனர் மக்கள்.

ஆனால் நம்முடைய ஏடுகளின் விற்பனை தொகையில் குறைவானதாக இருந்தாலும், படிக்கிறவர்கள் அதில் சொல்லப்படுகின்ற எண்ணத்தின் பின்னால் நின்று இயக்கத்தின் முதுகெலும்புகளாய்—நாடி நரம்புகளாய் இருக்கிறார்கள்.


நம்முடைய ஏடுகள் விற்பனையில் மற்றவர்களோடு போட்டிபோட முடியாவிட்டாலும், கருத்துக்களைப் பரப்புவனவாகவும், நல்ல எண்ணங்களை பிரதிபலிப்பனவாகவும் வெற்றிநடை போடுகின்றன.

கழக நண்பர்கள் கழக ஏடுகளை வாங்கிப்படிப்பதில்லை என்ற குற்றச்சாட்டை அமைச்சர் என். வி. என். சாட்டினார்: அதையே அவரோடு சேர்ந்து நானும் கூறுவதற்காக வருத்தப்படுகிறேன்.

கழக நண்பர்களுக்கு இன்னொரு ஏட்டைப் படித்துத்தான் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதில்லை. நமக்கு தெரியாததையா எழுதப் போகிறார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது.

தோழர்கள் நம்முடைய இயக்க ஏடுகளை விட நம்மைக்கேலி செய்யும் ஏடுகளை அதிகம் படிக்கிறார்கள். ஒன்று அப்படிப்படித்தால்தான் அவர்களுக்கு பதில் சொல்ல முடியும் என்ற கருத்தும் இருக்கலாம்; அடுத்தது, 'ஓ' இவன் இதையும் படிக்கிறானு என்றுமற்றவர்கள் பயப்படவேண்டும் என்பதற்காகவும் வைத்துக் கொள்ளலாம்.

ஒரு முறை அண்ணா அவர்கள் திராவிட நாடு இதழில் ''42க்கு மேற்பட்ட ஏடுகளுக்கு கழகத்துக்காரர்கள் சொந்தக்காரர்கள் என்று எழுதி ஒவ்வொரு இதழின் பெயரையும் வெளியிட்டு மனம் மகிழ்ந்தார்: அப்படிப்பட்ட ஏடுகள் எல்லாம் இப்போது நம்மிடையே இல்லை.



வசதிக்குறைவாலும், விற்பனையாளர்கள் பணம் அனுப்பாததாலும் ஒன்றன் பின் ஒன்றாக அவை நிறுத்தப்பட்டுள்ளன. இப்படிக் கஷ்டத்தோடேயே நாம் வளர்ந்திருக்கிறோம் என்பதால் மிச்சமுள்ள ஏடுகளையும் நிறுத்தி விடக்கூடாது.

நமக்குத் தெரியாததையா எழுதப்போகிறார்கள் என்ற எண்ணத்தை இயக்கத் தோழர்கள் மாற்றிக் கொண்டு இயக்கப்பத்திரிகைகளை ஆதரிக்க முன்வரவேண்டும்.

நம்முடைய கழக நிர்வாகிகள் சிலர் கூட நமது ஏடுகளைத் தொடர்ந்து படிப்பதில்லை. நம்முடைய ஏடுகளை நாம் வாங்கவேண்டும்.

அப்போதுதான் நடக்கும் பத்திரிகையும் இலாபம் பெறும்—நம்மை எதிர்ப்பவர்களுக்கு நல்ல பதில் தரும் [illegible] [illegible] பத்திரிகை உலகத்திற்கு கிடைத்திடும்.''

—இவ்வாறு சென்னையில் நடைபெற்ற ஆலடி அருணாவின் 'எண்ணம்' இதழ் துவக்கவிழாவில் பேசிய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

---

## கொழும்பில் தமிழ் முழக்கம்

### அன்னம்மாள் ஊர்வலத்தில் கண்கொள்ளாக்காட்சி!

கொழும்புவாழ் கிருத்துவ சமயத்தினரின் தமிழ் உணர்ச்சியை செக்கடித்தெரு அர்ச் அன்னம்மாள் தேவாலய மகோற்சவ தினத்தன்று காணக்கூடியதாய் இருந்தது. அன்று மாலை நடைபெற்ற திவ்விய நற்பிரசாத ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் பேசும் கிருத்தவர்கள் ஒலிபெருக்கிகளில் தமிழ் மொழியில் இனிய கிருத்தவ வேதங்களை இசைத்துக்கொண்டும் தனித் தமிழ்ச் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும் பவனிபோனார்கள்.

செட்டித்தெரு அர்ச் அன்னம்மாள் கோவிலை நிர்வகித்து வரும் வண சவரிமுத்து அடிகளார் தமிழ்ப்பற்று மிக்கவர். தமிழ் பேசும் கிருத்தவர்களுக்கு தமிழ் மொழி உயிரினும் மேலானது என்று அடிக்கடி சொல்லி தமிழிலே மயங்கிக் கிடப்பவர் சவரிமுத்து அடிகளார். அன்னாரது தமிழுணர்ச்சிக்கு நாம் அனைவரும் தலைவணங்குவோம்.

அர்ச் அன்னம்மாள் ஊர்வலத்தில் கிருத்துவ மக்கள் கொண்டு சென்ற தமிழ்ச் சுலோக அட்டைகளை அவதானித்தவர்கள் இந்துக்களாய் இருந்தால் இன்னொரு காட்சியை வெட்கத்தோடு எண்ணிப் பார்ப்பார்கள்—வேல் விழா நிகழும் வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவிலில் ''*VEL FESTIVAL*'' என்று ஆங்கிலத்தில் சோடித்து, தமிழ் வளர்த்த முருகனின் மானத்தையும் வாங்குவார்களே—அந்தக் காட்சியைத்தான்!

---

## தீக்குள் விரலை ...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

வுளே!' என்று கூறிக்கொண்டே எழுந்திருக்கின்றாள்.

காலை பத்து மணிக்கு, முதல் நாள் மாலை தன் சினேகிதி கொடுத்த விலாசத்துக்குச் செல்கின்றாள் பானுமதி. கல்லூரியில் இரண்டு மணித்தியால லீவு பெற்றுத்தான் அங்கே சென்றிருந்தாள். அந்த இடத்தை ஒரு சிறு வெளி என்றுதான் குறிப்பிட வேண்டும். பல அறைகளைக் கொண்ட ஒரு சிறு பங்களா அங்கே இருந்தது. பரிமளாவைத் தேடிவந்த அவளை வரவேற்றவர் ஒரு நடுத்தர வயதுடைய மனிதர். ஓர் அறையில் பரிமளாவை எதிர்பார்த்துப் பானுமதி காத்திருந்த போது, அந்த அறைக்குள் அவளை வரவேற்ற மனிதர் நுழைந்து கதவைத் தாழிடுகின்றார் பானுவுக்குத் தான் ஏதோ சூழ்ச்சியில் விழுந்துவிட்டோம் என்ற உணர்வு ஏற்படுமுன்னரே, அந்த மனிதன் பயங்கரமாகச் சிரித்தபடி அவளை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தான். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல நோக்குக் கூட்டுறவு பணிப்பாளர் சபை

# நியமனங்களில் அரசியல் தலையீடு!

தமிழ்ப்பகுதிகளில் இப்பொழுது புதிதாக அமைக்கப்படும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விரைவில் முறிந்து விடும் என்று மக்கள் அஞ்சுகின்றனர். இச்சங்கங்களின் பணிப்பாளர் சபைகளுக்குப் பாராளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டவர்கள் பலரை நியமித்து இந்தக் கைங்கரியத்தை மக்கள் அரசாங்கம் செய்து வருகின்றது.

தமிழ்ப்பகுதிகளின் பணிப்பாளர் சபைகளுக்கு உறுப்பினர்களை நியமனஞ் செய்யும் பொறுப்பு தபால் தந்தி அமைச்சர் செ. குமாரசூரியரிடம் ரி. பி. இலங்கரத்தினவால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திரு. குமாரசூரியர் பாராளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்தவர்களையும் வயிறுவளர்த்தற்காகப் புதிதாக சிறீ லங்கா சுதந்திரக்கட்சியை நிறுவித் தம்மைத்தாமே தலைவர்களாக ஆக்கிக்கொண்டவர்கள் கொடுக்கும் பெயர்ப் பட்டியல்களிலிருந்தும்பணிப்பாளர் சபைக்கு உறுப்பினர்களை நியமிக்கின்றாராம்.

குமாரசூரியர் தமிழ்ப் பகுதியிலுள்ள தொகுதிகள் ஒவ்வொன்றுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமையைச் செய்ய தமது சொந்த ''தர்பார்'' உறுப்பினரை வைத்திருக்கிறாராம். அவருடைய தர்பார் உறுப்பினர்களின் பட்டியலைப் பின்னர் வெளியிடுவோம். இந்தத் தர்பார் உறுப்பினர்கள் கொடுக்கும் பட்டியலே அவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

ப. நோ. கூ. சங்கங்களை முறித்த சுரண்டிய—கொள்ளை அடித்த பலர்—கூட்டுறவுச் சங்கங்களில் எவ்வித கடமையும் ஆற்றுதவர்கள் — கூட்டுறவுத்துறையில் போதிய அறிவும் அனுபவமும் இல்லாதவர்கள் பணிப்பாளர் சபைகளை அலங்கரிக்கிறார்கள்.

இச் சூழ் நிலையில் ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் பிரதம அமைச்சர் திருமதி சிறீமா பண்டாரநாயக்காவுக்கும் குமார சூரியருக்கும் அனுப்பியுள்ள கண்டனத் தந்திகளைக் கீழே தருகின்றோம்.

பிரதமருக்கு அனுப்பியுள்ள தந்தியில் பண்டிதர் கூறியிருப்பதாவது:—

'எங்கள் தமிழச்சு முத்திரையைக் கொண்ட கடிதங்களை அஞ்சல் நிலையங்கள் இப்பொழுது ஏற்க மறுப்பதால் இத் தந்தியினை அனுப்புகிறேன். கிடைத்தமையை அறிவிக்குக:

தமிழ்ப் பகுதிகளில் புதிதாக அமைக்கப்படும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் சபைகளுக்குச் சென்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத்தோற்றவேட்பாளர்களை நியமித்து அரசியலைப் புகுத்தி ஊழல்களுக்கு வழி வகுத்து இச்சங்கங்களைப் பாழாக்கும் நடவடிக்கைகளைத் தடுக்குமாறும் போட்டியிட்டுத் தோற்றவர்களைப் பணிப்பாளர் சபைகளிலிரு

## பிரதமரிடம் பண்டிதர் முறையீடு!

ந்து நீக்குமாறும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எனது ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள மூன்று சங்கங்களில் இரண்டினுக்கு என்னுடன் போட்டியிட்டுத் தோற்ற இருவர் நியமிக்கப்பட்டுளர். என்னுடன் போட்டியிட்டுத் தோற்றவர் இன்னும் ஒருவரேயுளர். இவரையும் மூன்றுவது சங்கத்துக்கு நியமித்து அச் சங்கத்தையும் பாழாக்கலாமே என மக்கள் வேதனையுடனும் வெறுப்புடனும் எனக்கு முறையிடுகின்றனர். பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்த உங்கள் அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் தோல்வி அடைந்த வேட்பாளர்களை நியமிப்பது தமிழ்ப் பகுதிகளிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களைச் சீர்குலையச் செய்வதற்கா எனும் சந்தேகம் மக்கள் மனத்தில் தோன்றியுளது. இவ்வாறு செய்வதால் உங்கள் மக்கள் அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் மதிப்பை மட்டும் இழக்கவில்லை ஊழல்களுக்கும் வழி வகுக்கின்றது என்பதை உங்களுடைய விசேட கவனத்துக்குக் கொண்டு வருவது எனது கடமையாகும்.

குமார சூரியருக்கு அனுப்பியுள்ள தந்தி விபரம் வருமாறு:—

''தமிழ் பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் சபைகளுக்கு உறுப்பினரை நியமிக்கும் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக அறியப்படுகிறது. சென்ற பாராளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்த வேட்பாளர்களை நியமித்து அரசியலைப் புகுத்தி ஊழல்களுக்கு வழிவகுத்து இச் சங்கங்களைப் பாழாக்க வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எனது ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள மூன்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இரண்டினுக்கு என்னுடன் போட்டியிட்டுத் தோற்றவர்கள் நியமிக்கப் பட்டுளர். இவர்களை உடனே நீக்கித் தகுதியானவர்களை நியமிக்குக. அன்றேல் என்னுடன் போட்டியிட்டுத் தோற்றவர்களில் எஞ்சியுள்ளவரை அச்சங்கத்துக்கு நியமிப்பது சமதர்மமாகும். இதனால் போட்டியிட்டுத் தோற்ற மூவருக்கும் நியமனங்கொடுத்த முறைமையுடன் பெருமையும் மக்கள் அரசாங்கத்துக்குரியதாகும்.''

---

### தமிழின நல...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் தடுத்துவிட முடியும்?

நடராசா அவர்கள் நலம் பல பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறோம்.

—'எஸ்ஸாரெம்'

---

### தமிழினத்துக் ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களின் பிரதிநிதித்வஸ்தாபனமாகவே தொடர்ந்து இருந்து வருகிறது; தனிப்பட்ட எவரிலுமே தமிழரசுக் கட்சி தங்கியிருக்கவில்லை;'

—அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் பேசியது.

---

### மொழிப் பிரச்...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

டும்; அல்லது பைத்தியகாரரின் மருத்துவசாலைக்குப் போக வேண்டியவர்களாக இருக்க வேண்டும்.

இந்த விடயத்தில் நாம் மிக்க உணர்ச்சியோடு பேசுகிறோம். பதினைந்து ஆண்டுகளாக இதற்காகப் போராடி வந்தோம். ஆனால் 1956ஆம் ஆண்டில் இருந்த நிலையில் தான் இன்றும் இருக்கின்றோம். எத்தனையோ அரசாங்கங்கள் எத்தனையோ வாக்குறுதிகளை அளித்தன. சில அரசாங்கங்கள் உண்மையாகவே கருமமாற்ற முற்பட்டன. ஆனால், அவ்விதம் செய்ய முடியவில்லை,

**சபையின் கடமை!**

பல ஆண்டுகளுக்கு ஏன் பல தலைமுறைக்கு இந்நாட்டின் ஆட்சியை வரையறை செய்யும் அரசியற் சட்டத்தை அமைக்கும் இந்நேரத்தில் இந்த நாட்டின் இரண்டு பேரினங்களில் ஒன்றான தமிழ் மக்களின் அச்சத்தையும் அபிலாசையையும் ஆராய்ந்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டியது இந்தச் சபையினுடைய கடமை. ஏனென்றால், இந்தத் தருணத்தை விட்டுவிட்டால் நாங்கள் மனிதர்களாக இங்குவாழ முடியாது.

இப்பொழுது மொழிப் பிரச்சினை தீர்ந்துவிட்டதா? மொழிப் பிரச்சினை தீரவில்லை. கடந்த 15 ஆண்டுகளில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி இந்த நாட்டை இரண்டுமுறை, ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகள் ஆண்டிருக்கிறது. இப்பொழுது சிறீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சியையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் சேர்தது முக்கூட்டு அணி ஒன்றை அமைத்திருக்கிறது. இவர்கள் தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே மொழிப் பிரச்சினையைப் பற்றி நன்கு ஆராய்ந்து எடுத்துக் கூறியிருக்கிறார்கள்:

இதில் ஒரு உண்மையை இவர்கள் சொல்லியிருக்கிறார்கள்: இதுவரையிலே இந்த மொழிப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். இதைத் தீர்ப்பதற்கு இரண்டு சட்டங்களுக்கு உள்ளும் நாங்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிபீடத்திலமர்ந்திருந்த ஒன்பது ஆண்டுகளிலும் அதன் பின்னர் ஐக்கிய தேசியக்கட்சிதமிழரசுக்கட்சியின் ஆதரவைப்பெற்றுஆட்சியிலிருந்த ஐந்து வருடங்களிலும், முக்கூட்டுக் கட்சி ஆட்சிக்கு வந்தஇந்த ஒரு வருட காலத்திலும் இந்த மொழிப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது.

**உரிமைப் பிரச்சினையின் நிலை**

1970ஆம் ஆண்டில் இந்த அரசாங்கத்தை நிறுவ முன்னர் ஐக்கிய முன்னணி அரசாங்கம் என்ன சொல்லியது? மொழிப் பிரச்சினையைத் தீர்க்க முயல்வோம் என்று சொல்லியது. ஒரு ஆண்டு காலமாகிவிட்டது. இந்த ஒரு ஆண்டு காலத்தில் இந்த மொழிப் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நான் சொல்கிறேன்.

தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தைப் பிரமாணங்கள் இல்லாமல் நடைமுறைப் படுத்த முடியாது. 1960ஆம் ஆண்டு அப்பொழுது இருந்த அரசாங்கம் இப்பிரமாணங்களைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. பின்னர் அந்தப் பிரமாணங்கள் மீட்கப்பட்டன. அதன் பின் பிரமாணங்களே கொண்டு வரப்படவில்லை.

பின் என்ன நடந்தது? 1966ஆம் ஆண்டு சில பிரமாணங்களை அப்பொழுதிருந்த தேசிய அரசாங்கம் கொண்டு வந்தது. அவர்கள் கொண்டு வந்தாலும்கூட அப்பொழுது இருந்த எதிர்க்கட்சியினர் அதை எதிர்த்தார்கள். இப்பொழுது அந்தப் பிரமாணங்களை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று கூறிவிட்டார்கள்.

தமிழிலே, ''பழைய குருடி கதவைத் திறவடி'' என்று ஒரு பழமொழி உண்டு. அது போல இப்பொழுது பிரமாணங்கள் இல்லாமல் வெறும் சட்டத்தை மட்டும் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு நிலையிலே தான் தமிழ்மொழி உரிமைப் பிரச்சினை இருக்கிறது.

---

### கல்வியமைச்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிமும்மொழிகளில் (போதனு மொழியாகக் கைக்கொள்ளும் மொழியைத் தவிர்ந்த) ஏதாவதொரு மொழியைப் படிக்கவேண்டும்.

(3) மூன்றுவது மொழியாக—விருப்ப பாடமாக, சிங்களம் தமிழ் அல்லது, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் (போதனுமொழி, இரண்டாவது கட்டாய மொழியாக ஏற்றுக்கொள்ளும் மொழிகளைத் தவிர்ந்த) ஒரு மொழியைப் படிக்கலாம்;

—இதுவே கல்வியமைச்சரின் மும்மொழித் திட்டமாகும்.

இத்திட்டம் பற்றியும், இதனால் தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய சாதக பாதகங்களைப் பற்றியும் விமரிசிப்பதற்கு பத்திரிகைத் தணிக்கை இடந்தரவில்லையென்பதை வாசகர்களுக்கு வருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

—ஆ.

---

### தனிச் சிங்கள...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் இங்கு வந்து சில சலுகைகளுக்காக தங்கள் இனத்தை விற்கிறார்கள்.

திரு. ஆனந்தசங்கரி;— நான்கு ஆண்டுகள் சலுகை பெற்றவர்கள் நீங்கள்.

திரு. தங்கத்துரை:—கௌரவ கிளிநொச்சித் தொகுதி அங்கத்தவர் எனது பேச்சில் தலையிடுகிறார், அவர் தலையீடு காரணமாக நான் எனது பேச்சில் இருந்து மாறமாட்டேன். எவ்வளவு தலையீடு இருந்தாலும் அதைச் சமாளித்து பேசும் ஆற்றல் எனக்கு இருக்கின்றது. கூலிக்கு மாரடித்து சில சலுகைகளுக்காகத் தமிழ் இனத்தை விற்கும் ஆட்கள் நாங்கள் அல்ல.

திரு. ஆனந்தசங்கரி— தமிழ் இனத்தை விற்றவர்கள் நீங்கள் தான்.

நாங்கள் தமிழ் இனத்தை விற்றிருந்தால் தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் எங்களை இச்சபைக்கு அனுப்பியிருக்க மாட்டார்கள். அவ்வாறென்றால் மீண்டும் மீண்டும் அவர்கள் எங்களைத் தங்கள் பிரதிநிதிகளாக அனுப்பி வருவதால், எங்கள் தமிழினம் ஒரு மடமையுடைய இனமாகத்தான் இருக்க வேண்டும். ஆனால், நீங்கள் அறிவீர்கள் தமிழினம் அப்படியான ஒரு இனமல்ல; எங்களிடத்தில் நம்பிக்கை வைத்தால்—எங்கள் கட்சியில் நம்பிக்கை வைத்தால் தங்கள் கோரிக்கைகளை நிச்சயமாக பெறலாம் என்று அவர்கள் ஆழ்ந்து சிந்தித்த பிறகுதான் தமிழ் மக்கள் இந்த முடிவுக்கு வந்தார்களென்பதை நீங்கள் அறிவீர்கள்.

---


நல்லூர் முருகன் கோவிலிலே
ஒரு சேதியை நான் கேட்டேன்......

**என்ன சேதி?**

நல்லூர் திருவிழாவில்

**ரகுநாதன் பதிப்பகம்**

**தமிழ்நூல்கள் விற்பனை நடத்துகிறது!**

குறைந்த விலையில் சிறந்த நூல்கள்!

★ நாவல்கள் ★ சிறுகதைகள்
★ கவிதை நூல்கள் ★ சமய ஏடுகள்
★ நாவலர் எழுத்தோவியங்கள்

**அனைத்தும் பெறலாம்!**

ரகுநாதன் பதிப்பகம்,
303, காலி வீதி,
கொழும்பு-3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2வது வாரமாக காட்சிதருகின்றது

**சென்ட்ரல்** (மருதானை) 10, 2, 6. மணிக்கு

**ராணி** (யாழ்நகர்)

**ராஜேஸ்வரா** (மட்டுநகர்)



சுந்தரராஜன்
சௌகார்ஜானகி
சிவகுமார்
லட்சுமி
கள்ளபாட் நடராஜா
ராதிகா
டி. ஆர். ராமச்சந்திரன்
—நடித்த—

# கஸ்தூரி திலகம்

---

இப்பொழுது ஜனத்திரள் நிறைந்த காட்சிகளுடன் காட்சியளிக்கின்றது

**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை)

**கிறவுண்** (மருதானை)

**வின்சர்** (யாழ்நகர்)

**இம்பீரியல்** (மட்டு நகர்)

மக்கள்திலகம் **எம். ஜி. ஆர்., வாணிஸ்ரீ, நாகேஷ்,**

எஸ். ஏ. அசோகன், எம். என். நம்பியார், ஜோதிலட்சுமி —நடித்த—

தமாஸ் பிக்சர்ஸ் அளிக்கும்

# தலைவன்.

டைரக்ஷன்:- தமாஸ் சிங்கமுத்து

---

3வது வாரமாக காட்சிதருகிறது

**கெப்பிடல்** (கொழும்பு)
**பிளாசா** (வெள்ளவத்தை)
**விஜயா** (மட்டுநகர்)

ரவிச்சந்திரன், ஜெயலலிதா, அசோகன், நடித்த



# மூன்றெழுத்து

---

ஆயிரக்கணக்கான ரசிகப் பெருமக்களின் வேண்டுகோளுக்கிணங்க
இப்பொழுது வெற்றியுடன்
கிங்ஸ்லியில் காண்பிக்கப்படுகிறது
சிவாஜி கணேசன் — சாவித்திரி
நடித்த

# பாசமலர் (புதிய கொப்பி)

---

3வது வாரம்

**வெலிங்டன்** (யாழ்நகர்)

சிவாஜிகணேசன்
வாணிஸ்ரீ
—நடித்த—

# நிறைகுடம்

---

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

**ரிடோ** (யாழ்நகர்)

# ஏக் பூல் தோமாலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1971-ம் வருடம் ஆவணி மாதம் 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவை மகேசன்